விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு
Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 06 வெள்ளிக்கிழமை (23.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308





# தமிழ் அரசியல் தலைவர்களுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்

## ஐரோப்பிய மன்றில் அவசர தீர்மானம்

(பிரசல்ஸ்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்களுடன் இலங்கை அரசாங்கம் பேச்சு நடத்தவேண்டும். அத்துடன் 13ஆம் திருத்தச்சட்டத்தை விரைவாகவும் முழுமையாகவும் அமுல்படுத்த வேண்டும் என ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)



மீள் குடியமர்வுக்கான பத்திரத்தை நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ பெண் ஒருவருக்கு வழங்குவதை படத்தில் காணலாம்.

## ஜி.எஸ்.பியை அலட்சியப்படுத்திய அரசாங்கம் அதன் விளைவை இன்று அனுபவிக்கின்றது

### மங்கள சமரவீர சாடல்



(கொழும்பு)

நாட்டில் மனித உரிமை மீறப்படும்போதெல்லாம் நான் அது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கூறிய போதும் ஜனாதிபதி மகிந்தவும் அவருடைய சகோதரர்களும் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

எல்லா கலந்துரையாடல்களின் போதும் ஜி.எஸ்.பி.சலுகையைப் பற்றிப் பேசினால் அதனை அலட்சியப்படுத்தி விடுவர். அதன் விளைவை இன்று அவர்கள் அனுபவிக்கின்றனர் என்று (14ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தகாரருக்கு அனுமதி வராததால் பண்ணை வீதி திருத்துவதில் தாமதம்

### ஆசிரியர் தலையங்கத்துக்கு அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஒப்பந்தகாரர்களுக்கான அனுமதியை பெருந்தெருக்கள் அமைச்சு வழங்காததினால் பண்ணை வீதியை திருத்தும் பணிகள் தாமதமடைந்ததாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதி வலம்புரி நாளிதழில் வரையப்பட்ட ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் தான் மேற்கொண்ட நடவடிக்கையின் பிரகாரம் பண்ணைவீதி திருத்தப்பணிகளை விரைவில் ஆரம்பிக்குமாறு பெருந்தெருக்கள் அமைச்சு (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் போரின் இறுதியில் நிகழ்ந்தவை மனித நேயச் சட்டங்களை மீறுகின்ற செயல்

### அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை

(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற போரின்கடைசி சில மாதங்களில் நடந்ததாக கூறப்படும் சில சம்ப வங்கள் சர்வதேச மனித நேயச்சட்டத்தை மீறிய செயல்களாகும். இவை மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாக கருத்தப்படக் கூடியவை என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு அளித்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதலின் இறுதி மாதங்களில் இடம் (14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்று மீள்குடியமர்வு ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களில் சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் நடவடிக்கை நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலுள்ள மேலும் 25ஆயிரம் பேர் நவம்பருக்கு முன் யாழ். அழைத்துவரப்படுவர்

### யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சொந்த இடமாகக் கொண்ட மேலும் 25ஆயிரம் பேர் நவம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்படுவர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதுதொடர்பில்யாழ். அரசஅதிபர்க.கணேஷ் மேலும் தகவல் தருகையில்,

வவுனியா நலன்புரி முகாம்களில் உள்ள யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 45 ஆயிரம் பேரின் விபரங்கள் யாழ். மாவட்ட செயலகத்திற்கு வவுனியா மாவட்ட செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதில் பாதுகாப்பு அனுமதி கிடைக்கப் பெற்ற 6 ஆயிரத்து 270 (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா தேக்கவத்தையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை அடுத்த சில தினங்களில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா -யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை ஆரம்பிக்கும் சோதனைச்சாவடி வவுனியா தேக்கவத்தை மைதானத்திற்கு அண்மையாக மாற்றுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

வவுனியா- யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை ஆரம்பிக்கும் சோதனைச்சாவடி தற்போது ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)



யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை வழங்கும் வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார். இவ்வைபவத்தை கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. அடுத்த ஆண்டுக்கான இலவச பாடநூல்களை வழங்கும் வைபவம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டிருந்தது.

எனினும் மாணவர்களுக்கான பாடநூல்களை (14ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 பேர் இன்று வருவர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து தென்மராட்சி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 பேர்வரை இன்று சாவகச்சேரிக்கு அழைத்து வரப்படுவர் என அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதேவேளை நல்லூர், கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்களை சொந்த இடமாகக் கொண்ட 326 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து ஒரு பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டதாகவும் கூறினார்.

இது தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் தகவல் தருகையில்,

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து நல்லூர், கோப்பாய் பிரதேச செயலக பிரிவுகளை சொந்த (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சாரணர் பாசறை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சாரணர் மாவட்டக் கிளைச் சங்கத்தின் 29-வது வருடாந்த சாரணர் பாசறை விழாவும் குருளைச் சாரணர் வெளிக்கள நாளும் இன்று வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து மூன்று நாள்கள் யாழ். இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

செயற்குழுத் தலைவர் த.நா.போஜன் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச-14)

## செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.(உ/த) பரீட்சை-2009 செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.கர்நாடக சங்கீதம் (55),பரதநாட்டியம் (53), மனைப்பொருளியல் (28) பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை பாடங்களுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தத்தமது வலயக்கல்வி அலுவலகங்களில் தங்களது பாடசாலை மாணவர்களது அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

## நூலக தின விழா

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் நூலகதின விழா இன்று காலை 9.30 மணிக்கு நூலக மன்றத் தலைவி செல்வி சோபிதா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பிரதம நூலகர் திருமதி ராஜேஸ்வரி கருணானந்தராஜா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சுந்தரசிவம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் மற்றும் விருந்தினர்களின் உரையும், நூலக வாரத்தை முன்னிட்டு நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச)




நொக்கியா தொலைபேசியின் வடமாகாண பிரதான முகவராக திருமுருகன் கொம்.நெற் நிறுவன உரிமையாளர் க.கலாதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.இவருக்கு அங்கீகாரம் அளிக்கும் விழா கடந்த 16ஆம் திகதி Bule Havan ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் நொக்கியா நிறுவன தேசிய முகாமையாளர் ராஜீவ் குணரட்னே, க.கலாதரனுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட பத்திரத்தை வழங்குவதையும், அருகில் நொக்கியா போன் வியாபார அபிவிருத்தி மொத்த வலைப்பின்னல் உதவி முகாமையாளர் சகான் சியாவுடீன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## உறவினர்களைப் பொறுப்பேற்க இலவச விண்ணப்பம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் யாழ். மாவட்ட நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களைக் குடும்பங்களாக அல்லது தனி ஆள்களாகப் பொறுப்பேற்க விரும்பும் உறவினர்கள் உடனடியாக பிரதேச செயலகங்களிலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இன்று தொடக்கம் இலவசமாக விநியோகிக்கப்படும் மாதிரி படிவத்தின் பிரகாரம் விண்ணப்பிக்குமாறு அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப் பத்திரம் பூரணமாகப் பூர்த்தி செய்யப்பட்டு உரிய கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டுத் தங்கள் பிரதேச செயலகங்களிலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கையளிக்கப்படல் வேண்டும்.

இதற்கான அங்கீகாரம் மிக விரைவாகத் தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து கிடைக்கப் பெறுவதற்கு அரசாங்க அதிபரினால் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அனுமதி கிடைத்ததும் தத்தமது உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## பத்திரிகைச் சுதந்திரப் பட்டியலில் இலங்கை 162 ஆவது இடத்தில்

இந்த வருடத்துக்கான பத்திரிகை சுதந்திரப் பட்டியலில் 175 நாடுகளில் இலங்கை 162 ஆவது இடத்தில் உள்ளது என எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆசியாவில் அரசாங்கங்களின் அரசியல் அதிகாரம் மேலாதிக்கம் செலுத்துவதால் இந்த வருடம் மீண்டும் பத்திரிகை சுதந்திரம் செயலிழந்ததாக பரிஸை தளமாக கொண்டு இயங்கும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை சுதந்திரப் பட்டியலில் டென்மார்க் முதலாமிடத்தில் இருப்பதுடன், இந்தியா 105 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 149 ஆவது இடத்திலும், வியட்நாம் 166 ஆவது இடத்திலும், சீனா 168 ஆவது இடத்திலும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை 175 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் எரித்திரியா கடைசி இடத்தை வகிக்கின்றது. (ச-3)

## கந்தசஷ்டிக் கால ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் கந்தசஷ்டி கால விசேட ஆன்மீக சொற்பொழிவு நிகழ்வுகள் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சாவல்கட்டு அந்திக்குளி ஞானவைரவர் ஆலயத்தில் ஈழத்தில் முருக வழிபாட்டின் மகத்துவம் என்னும் விடயம் பற்றி சைவப் புலவர் நித்திய தசிதரன் கருத்துரை வழங்கவுள்ளார்.

நாளை சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சுதுமலை ஞானவைரவர் ஆலயத்தில் நக்கீரர் வாழ்வில் முருகன் என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் பகீரதன் கருத்துரை வழங்கவுள்ளார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு வட்டு சிவன் இந்து அறநெறிப் பாடசாலையில் அறநெறிக் கல்வியின் மகத்துவம் என்னும் விடயம் பற்றி சைவப் புலவர் நித்திய தசிதரன் கருத்துரை வழங்கவுள்ளார். (ஓ-9)

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்விவலய அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை ஆசிரிய நிலையத்தில் நடைபெறும். சகல அதிபர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் மாதாந்த சிறப்பு சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கச்சியப்பரும் கந்தபுராணமும் எனும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச-3)

நெற் போன் (கூடிய நேர கதைப்பவர்களுக்கு)
இருபது நாடுகளுக்கு நிமிடம் 2/=
Net Browsing 40/=
Kit, Mobitel, SLT Net, SLT Passport, CDMA Citylink, Lanka bell, Suntel காட்டுக்களும் Reload க்களும்
பல்கலைக்கழக மாணவரின் நன்மைகருதி
காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை பெற்றுக்கொள்ள
கணபதி நெற் & கூ பலஸ்
32 பலாலிவீதி, ஆலடிச்சந்தி. (பரமேஸ்வராச் சந்தியில் இருந்து 100யார் தூரத்தில்)

விற்பனைக்கு
Canon EOS 1000 D விற்பனைக்கு உண்டு. ஒரு வருடம் உத்தரவாதம் உண்டு - விலை 80000
தொடர்புக்கு:
T.P: 021 7902892
(3829)

விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகா போற்றி!

கௌரவிப்பு நிகழ்வு



உயர்திரு.
கந்தையா வேலுப்பிள்ளை
(பொட்டர்)

போதிராம்பிட்டி போதிப்பிள்ளையார் வளாகமதில்
சேவை பல புரிந்து தோப்பு வாழ் மக்களினால் 'பொட்டர்'
எனத் திருநாமமிட்ட அவர்களுக்கு

திருவாளர் கந்தையா வேலுப்பிள்ளை
(பொட்டர்)

விநாயகரின் அருட்கடாட்சத்துடன் வாழ்த்தியே இன்னும்
பல வருடங்கள் சேவை புரிந்திட பொன்னாடை போர்த்திக்
கௌரவித்திடும் இந் நன்னாளில் 23.10.2009 (வெள்ளிக்கிழமை)
பி.ப.3.00 மணிக்கு அச்சுவேலி தோப்பு போதிராம்பிட்டி
போதிப்பிள்ளையார் ஆலய அடியார்கள், பக்தர்கள் இவ்
ஆலயத்திற்கு வருகை தந்து வாழ்த்தி கந்தசஷ்டி நாளில்
இறையருளை பெற்று உய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

-ஆலய நிர்வாகம்.

(C-3590)

பகிரங்க ஏலவிற்பனை

யாழ். பழைய பூங்கா வளாகத்திலுள்ள கீழ்க்குறிப்பிடப்பட்ட பொருட்கள் 2009.10.30-ம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலத்தில் பொருட்களைப்பெற விரும்புவோர் அவற்றை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் தெரிவுசெய்யப்படுவோர் அதற்கான முழுத்தொகையையும் உடனே செலுத்தி பொருட்களை பழைய பூங்கா வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப்புறப்படுத்துதல் வேண்டும்.

1.கற்கள்
I. கண்டகல்
II. முருகைக்கல்
III.கட்டிட இடிபாட்டுக்கல் மற்றும் கற்கள்
2.பழுதடைந்த வாகனப்பாகங்கள்
I. அடிச்சட்டங்கள்
II.பிற

க.கணேஷ்
அரசாங்க அதிபர்/ மாவட்டச்செயலர்
யாழ்ப்பாணம்.

(C-3592)

# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளின் 30.09.2008 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ் ஸ்ரான்லி வீதி-030 | | மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை -030 |
| 2 | சேவை நிலையம், மானிப்பாய்-837 | 05.12.2009 | |
| 3 | காங்கேசன்துறை - 031 | | |
| 4 | பருத்தித்துறை-285 | 06.12.2009 | |
| 5 | யாழ். பிரதான வீதி-104 | | |
| 6 | சேவை நிலையம், உரும்பிராய்-865 | 07.12.2009 | |
| 7 | நெல்லியடி-106 | | |
| 8 | அச்சுவேலி-107 | | |
| 9 | சங்கானை-108 | 08.12.2009 | |
| 10 | சுன்னாகம்-109 | 09.12.2009 | |
| 11 | சாவகச்சேரி-110 | | |
| 12 | சேவை நிலையம், கொடிகாமம்-904 | 10.12.2009 | |
| 13 | வல்வெட்டித்துறை-141 | | |
| 14 | யாழ். பல்கலைக்கழகம்-162 | | |
| 15 | சேவை நிலையம்,திருநெல்வேலி-855 | 11.12.2009 | |
| 16 | யாழ். கன்னாதிட்டி -284 | | |
| 17 | சேவை நிலையம், இணுவில்-905 | 12.12.2009 | |
| 18 | சேவை நிலையம், மல்லாகம்-899 | 13.12.2009 | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிரதேச முகாமையாளர்

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3589)

# எமது பொது வேட்பாளரை தோற்கடிக்க இந்திரனாலும் முடியாது

## எஸ்.பி.திஸாநாயக்க சூளுரை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிச்சயமாக தோல்வியை தழுவார் என ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் வெற்றியடைந்துள்ளமையை ஏற்றுக்கொள்வதாகவும் யுத்தம் மீளவும் ஏற்படாது இருக்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு முனைப்பும் இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மட்டுமன்றி முழு நாட்டு மக்களுமே பல்வேறு பிரச்சினைகள் எதிர் நோக்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய அளவுக்கு திராணி அற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வெற்றிகளைப் பிரச்சாரம் செய்து தொடர்ச்சியாக ஏனைய பிரச்சினைகளை மூடி மறைக்கும் அரசாங்கத்தின் திட்டங்கள் நீண்ட காலத்திற்கு பலனளிக்காதென அவர் தெரிவித்துள்ளார்.எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் அதிருப்தி தெளிவாக வெளிப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான எதிர்க்கட்சிகள் களமிறக்கவுள்ள பொதுவான வேட்பாளரைத் தோற்கடிக்க எந்த இந்திரனாலும் முடியாது என எஸ்.பி. திஸாநாயக்கா சூளுரைத்துள்ளார். (ஓ-6)

# அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா போட்டியிட்டாலும் ஜனாதிபதி மஹிந்தவை வீழ்த்த முடியாது

## சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அனுரத்த ரத்வத்த

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்த முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ஜெனரல் அனுரத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் எந்தத் திகதியில் நடைபெற்றாலும் அது ஜனாதிபதியின் வெற்றிஸ்யப் பாதிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார். 30 ஆண்டுகளாக நீடித்த வடக்கு கிழக்கு யுத்தத்தை ஜனாதிபதி மிகவும் வெற்றிகரமாக தோற்கடித்துள்ளமையினால் அவருக்குச் சவாலாக அமையக்கூடிய வேட்பாளர்களை எவராலும் நிறுத்த முடியாது என ரத்வத்த சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவோ அல்லது சரத் என்சில்வாவோ எதிர்க்கட்சிகளின் சதி வலையில் சிக்க மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக பராக் ஒபாமவை நிறுத்தினாலும் சாதகமான பலன் கிட்டாது என்பது திண்ணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)







கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இசுறு பாடசாலை ஆசிரியர்களுக்கான அறிவூட்டல் கருத்தரங்குக்கு கல்வி வலுவூட்டல் அமைச்சிலிருந்து வருகைதந்த E.K.S.P பணிப்பாளர் அனுராதிசநாயக்க, இசுறு பாடசாலை பணிப்பாளர் S.L.M.D பியசேன DLC நிறுவன பாடவிதானப் பணிப்பாளர் ரஞ்சித் குமாரசிறி ஆகியோர் பாடசாலை அதிபர் மற்றும் கல்விச் சமூகத்தால் அழைத்துவரப்படுவதையும், வடக்கு மாகாண இசுறு பாடசாலைக்கான இணைப்பாளர் க.மகேந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் .படங்களில் காணலாம்.

(படங்கள்:வடமராட்சி நிருபர்)

## பொன்விழாவும் பரிசளிப்பு விழாவும்

(அல்வாய்)

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பொன்விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக புலோலி வடகிழக்கு கிராமஅலுவலர் ப.குமரேசன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற கணக்காளர் நா.சின்னையா, பிரபல பொருளியல் ஆசியர் ம.லோகசிங்கம், நலன்விரும்பிகளான வ.தியாகராசா,திருமதி ப.பாக்கியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமார் வழங்கிக் கௌரவிப்பார். அத்துடன் பொன் விழா தொடர்பான சிறப்புமலரொன்றும் வெளியிடப்படவுள்ளது. (ஓ-6-19)

## தரம் 11 மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(சாவகச்சேரி)

இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 11 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் கணிதம், ஆங்கிலம்,விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு, நாளையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாமல் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கிற்கு குறிப்பிட்ட 500 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## ஐக்கிய நாடுகள் தினவிழா

ஐக்கிய நாடுகள் தினத்தை கொண்டாடும் முகமாக சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் ஐக்கிய நாடுகள் தின விழா நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யுனிசெப் நிறுவனத்தின் பணிப்பாளர் செல்வி மகா டமாஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-6)

## கந்தவனத்தில் கந்தசஷ்டி சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தவனம் ஆலயத்தில் ஸ்கந்தசஷ்டி பெருந்திருவிழாக்களம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

அத்துடன்இன்று மாலை 11.00 மணிக்கு ஐப்பசி முதல் வெள்ளிக்கிழமை விசேட பூஜைகள் நடைபெறும். கந்தசஷ்டி 5ஆம் நாள் பெருவிழாவில் ''இந்துசமய இறைமைகள்'' எனும் தலைப்பில் ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ)

# யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகளை அகற்ற விசேட திட்டம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் தேங்கிக் காணப்படுகின்ற குப்பைகளை அகற்றுவுதற்கு விசேட திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக மாநகரசபை முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட வீடுகளிலும் ஆலயங்களிலும் குப்பைகளை சேகரித்து வைப்பதற்கென தயாரிக்கப்பட்ட பைகள் மிக விரைவில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் பொதுமக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் தங்களால் சேகரிக்கப்படும் குப்பைகளை மின்சுழற்சிக்குப் பயன்படும் பொருட்கள்,பசளைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள், கழிவுப் பொருட்கள் என தரம்பிரித்து சேகரித்து வைக்கப்படும் பட்சத்தில் மாநகரசபை ஊழியர்கள் இதனை எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் இத்திட்டத்தை மீறி குப்பை கூழங்களை தெருக்களிலும் மக்கள் நடமாடும் பிரதேசங்களிலும் வீசப்படுமாயின் மாநகர சபை சட்ட திட்டங்களுக்கு அமைவாக தண்டப் பணம் உடனடியாக அறவிடப்படும் எனவும் இத்திட்டத்திற்கு அமைவாக பொதுமக்கள் தமது பூரண ஆதரவை வழங்கி யாழ். நகரத்தை குப்பை கூழங்கள் அற்ற மாநகரமாக மிளிரச்செய்யவேண்டும் என யாழ். மாநகர சபை முதல்வர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-7)

# வியாபார முகாமைத்துவமாணி மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வியாபார முகாமைத்துவமாணித் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களிலும் நடைபெறவுள்ளது.

இந்நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல் தனிப்பட்ட கடிதங்கள் மூலமும், இணையவழி மூலமும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க.தேவராஜா அறிவித் துள்ளார். (ஓ)

# மெய்வல்லுநர்களுக்கான பயிற்சிமுகாம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டுத் திணைக்களம் நடாத்தும் மெய்வல்லுநர் பயிற்சிமுகாம் இன்று வெள்ளிக்கிழமை முதல் 25 ஆம் திகதிவரை துரையப்பா விளையாட்டரங்கில் காலை 8மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி முகாமில் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் , யாழ். மத்திய கல்லூரி அதிபர் ஓங்காரமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இப் பயிற்சி முகாமில் பயிற்றுவிப்பாளர்களாக இலங்கை மெய்வல்லுநர் பயிற்சி சங்கத்தின் தேசிய பயிற்றுநர் வை. கே. குலரட்ண, மெய்வல்லுநர் பயிற்று நர் ஜெயந்தா காமினி, சியாம் மூடல், கே. பி.வி.நிசங்கா, எம்.வி.பி.பெரேரா, றொசினி வொவற்ற, தொழில்நுட்ப உத்தியோகத்தர் ரி.எம்.தெய்வேந்திரா, வடமாகாண விளையாட்டு உதவிப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, மாவட்ட இணைப்பாளர் எவ்.ஜே. ரூபசிங்கம் ஆகியோர் இணைந்து பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

எனவே இப் பயிற்சிமுகாமில் கலந்து கொள்ளவுள்ள வீர,வீராங்கனைகள் இன்று காலை 8மணிக்கு முன்னதாக துரையப்பா விளையாட்டரங்கில் தவறாது சமுகமளிக் குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ-7)

## திருக்குறள், வாய்ப்பாடு மனனப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தினால் நடத்தப்படும் வலய மட்ட திருக்குறள், வாய்ப்பாடு மனனப் போட்டிகள் இராமநாதன் கல்லூரியில் இன்றுவெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் கோட்டமட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் அனைவரையும் தவறாது அழைத்து வருமாறு வேண்டப்படுகின்றனர். (ஓ)

## ஆசிரியர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தினால் செயற்படுத்தப்பட்ட யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் எழுத வாசிக்கத் தெரியாதோருக்கான செயற்பாட்டில் ஈடுபட்டு சாதனை படைத்த ஆசிரியர் அதிபர்களுக்கான கௌரவிப்பு விழா நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வைத்திய கலாநிதி எஸ்.தியாகராஜா யாழ்.பல்கலைக்கழக வணிக பீடாதிபதி பேராசிரியர் கே.தேவராஜா, பேராசிரியர் கலாமணி கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி தனபாலன், தொழில் அதிபர் இ.எஸ்.பி.நாகரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-7)

## கல்விசார் ஊக்குவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபை நடத்தும் ''கல்வி சார் உக்குவிப்பு' நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சுன்னாகம், சந்தை வீதியில் அமைந்துள்ள அம்பேத்கார் சனசமூக நிலையத்தில் சபைத்தலைவர் ச.தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுன்னாகம், சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பாளர் சபா.புஷ்பநாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் அ.தெய்வேந்திரன் காங்கேசன்துறை, மக்கள் வங்கி முகாமையாளர் க.றமேஸ்நேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள், 2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர் மற்றும் தரம் 6 முதல் 12 வரையான மாணவர்களுக்கு தொடர் ஊக்குவிப்பு ஆகிய கல்வி ஊக்குவிப்பு வழங்கப்படவுள்ளன. (ஓ-9)




## பரிசில் தினவிழா

(அல்வாய்)

வடமராட்சி மகளிர் கல்லூரியில் வருடாந்த பரிசில் தினவிழா நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி . வி. சுகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் கலந்து சிறப்பிப்பதுடன் பரிசில்களை திருமதி. கௌரி சண்முகலிங்கன் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-19)

## சர்வதேச சிறுவர் தின விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம், சாவகச்சேரி மக்கள் வங்கி மற்றும் சாவகச்சேரி வணிகர் மன்றத்தின் அனுசரணையுடன் சர்வதேச சிறுவர் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய யாழ்.திட்ட உதவி இணைப்பாளர் எஸ்.கேதீஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய யாழ். திட்ட உத்தியோகத்தர் எஸ்.பாலச்சந்திரன், சாவகச்சேரி மக்கள்வங்கி முகாமையாளர் எஸ்.சிவசுப்பிரமணியம் மற்றும் சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்ற தலைவர் ப.பாலேந்திரா ஆகியோர் கலந்துகொள் ளவுள்ளனர்.

விழாவில் சிறுவர்களின் கலைநிகழ்வுகளும் பரிசில் வழங்கல் வைபவமும் இடம்பெறவுள்ளன. (ஓ-29)

# விஜய நகரப் பேரரசு

33

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

பேராசிரியர்
க.அ.நீலகண்டசாஸ்திரிகள்

அவனுக்கு வைணவத்தில் மிகுந்த பற்று இருந்தது என்பது உண்மையே. எனினும், இந்துமதத்தின் ஏனைய பிரிவுகளையும் அவன் சமமாக மதித்து நடந்தான். சண்டையில் தோற்றுப்போன பகைவர்களிடம் அவன் காட்டிய கருணையும், போரிற் கைபற்றிய ஊர்களில் வாழ்ந்த மக்களிடம் அவன் காட்டிய ஒப்பரவும், குடி மக்களையும் சிற்றரசர்களையும் அவன்பால் ஒருங்கே ஈர்த்த அவனுடைய போர்த்திறமையும், வெளிநாட்டு தூதர்களிடத்தில் அவன் வழக்கமாகக் காட்டிய அன்பும் அவர்களுக்களித்த இனிய வரவேற்பும், அவனுடைய வீறார்ந்த தோற்றமும் அவனுடைய கண்ணியமான தூய வாழ்க்கைக்கு அறிகுறியாய் இருந்த அவனுடைய இனிய இயல்பும் பண்பட்ட பேச்சும், குடிமக்களுடைய நலனில் அவனுக்கிருந்த பேரார்வமும், எல்லாவற்றிற்கு மேலாக அவன் கோயில்களுக்கும் பார்ப்பனர்க்கும் அளித்த மாபெரும் மானியங்களும் தென்னிந்திய அரசர்கள் அனைவரிலும் அவனே தலைசிறந்தவன் என்பதை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

கிருஷ்ணதேவராயன் பல கட்டடங்களைக் கட்டி தலைநகரின் வசதியையும் அழகையும் பெருக்கினான். தன்னுடைய ஆட்சியின் தொடக்கத்தில் அவன் விருபாட்சர் கோயிலில் ஒரு பழைய கோபுரத்தை பழுது பார்த்ததோடு ஒரு புதிய கோபுரத்தையும் கட்டினான். 1513 இல் கிருஷ்ணசாமி கோயிலொன்றை கட்டி உதயகிரியிலிருந்து எடுத்துக்கொண்டு வந்த பாலகிருஷ்ண விக்கிரகத்தை அதில் எழுந்தருளச் செய்தான் என்பதை நாம் முன்பே கண்டோம்.

கோவாவில் ஆளுநர் முதல்வர் (கவர்னர் -ஜெனரல்) இசைவின் பேரில், அங்கிருந்த போர்த்துக்கீசியப் பொறியியல் வல்லுநன் ஒருவனை விஜயநகரத்துக்கு வரவழைத்து அவனுடைய உதவியால் விஜயநகரத்தை சுற்றியிருந்த புன்செய் நிலங்களின் பாசன வசதி யைக் கிருஷ்ணதேவராயன் பெருக்கினான்.

தலைநகரின் தென்புறத்தில் அழகிய புறநகர் ஒன்றை நிர்மாணித்து அதற்குத் தன்னுடைய தாயாரான நாகலாதேவியின் நினைவாக நாகலாபுரம் என்று பெயரிட்டான். அந்த நகரத்திற்குத் தேவையான தண்ணீர் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து வந்தது. அந்தத் தொட்டியை விஜயநகரத்திற்குத் தாம் சென்றிருந்தபோது கட்டிக்கொண்டிருந்தார்கள் என்று பாயிஸ் கூறுகிறார். நதிக்கரையிலிருந்த விட்டலசாமியின் கோயிலுக்குக் கிருஷ்ணதேவராயன் புதிய ஒப்பனை செய்தான்.விஜயநகரக் கட்டடக் கலையின் “ ஒப்பனை நயவளத்தினுடைய உச்சநிலைய அந்தக் கோயிலில் நாம் காண்கிறோம். அந்தக் கோயிலை அழகு படுத்தும் பணி கிருஷ்ணதேவராயன் இறந்த



சிதம்பரம் வடக்கு கோபுரமும் குளமும்

பின்னும் பல ஆண்டு தொடர்ந்து நடை பெற்றது. 1565 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் விஜயநகரத்தைத் தகர்த்தெறிக்கும் வரையிலும் அந்த வேலை தொடர்ந்து நடந்ததென்று நாம் கருதலாம். கிருஷ்ணசாமி கோயிலின் தென்மேற்குக் கோணத்திற்கருகில் இருந்த ஒரு பாறையைச் செதுக்கி உருவாக்கிய மிகப் பெரிய நரசிம்மச் சிலை கிருஷ்ண தேவராயன் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த கடைசித் தொல்பொருட் சின்னங்களுள் ஒன்றாக இருக்கிறது(1528). அது பல சிதைவுகளுக்குள்ளாகிய போதிலும் விஜ நகரத்தின் இடிபாடுகளுள் நம் கவனத்தைப் பெரிதும் கவருகின்ற ஒரு கலைச்சின்னமாக இன்னும் திகழ்கிறது.

அச்சுதராயனுடைய அவையில் சிறிது காலந் தங்கியிருந்த நூனிஸ், புதிய அரசன் தீயொழுக்கமுடையவனென்றும், கொடுங்கோலனென்றும், நேர்மையும் தைரியமும் அற்றவனென்றும், நாட்டின் குடிமக்களும் தலைவர்களும் அவனுடைய தீய குணத்தையும் நடத்தையும் மிகவும் வெறுத்தார் கள் என்றும் எழுதி வைத்திருக்கின்றார். அச்சுதன் உண்மை யில் அவ்வளவு கெட்டவன் என்று தோன்றவில்லை. தனக்குச் சொந்த மகன் ஒருவன் இருந்த போதிலும், அச்சு தராயனே தனக்குப் பின் அரசனாக வேண்டுமென்று கிருஷ்ண தேவராயன் அவனைத் தேர்ந்தெடுத்தான்.

எனினும், அவன் அரியணையேறிய போது (1529). அவனுடைய நிலைமை கடினமாகத் தான் இருந்தது. அச்சுதராயனையும் மற்ற அரசகுமாரர்களையும் நாட்டின் அமைதி கெடக்கூடாது என்ற காரணத்துக்காகக் கிருஷ்ணதேவராயன் சந்திரகிரிக் கோட்டையில் அடைத்து வைத்திருந்தான்.

கிருஷ்ணதேவராயன் இறந்தவுடனே அவனு டைய பதினெட்டு மாதக் குழந்தையே அரசன் என்று ராமராயன் விளம்பரப்படுத்தினான். ஆனால், அந்தக் குழந்தையின் பெயரில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ராமராயன் செய்த சூழ்ச்சியைச் சாளுவ வீர நரசிம்மன் தகர்த்து, அச்சுதராயன் சந்திரகிரியிலிருந்து வரையிலும் விஜயநகர அரியணையை காலியாக வைத் திருந்தான்.

வேறொருவனை அரியணையேற்றுவதற்கு ராமராயன் செய்த முயற்சியைத் தடை செய்யும் நோக்கத்துடன் ,அச்சுதராயன் சந்திரகிரியிலிருந்து திரும்பி வருகிற வழியில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முதலில் திருப்பதியிலும் பின்னர்க் காளத்தியிலுமாக இருமுறை முடிசூடிக்கொண்டான்.

கிருஷ்ணதேவராயன் இறந்துபோனான் என்று கேள்விப்பட்ட உடனே விஜயநகரத்தின் பகைவர்க்கெல்லாம் அந்தப் பேரரசைத் தாக்கத் தொடங்கினார்கள். இஸ்மாயில் அடில்கான் மீண்டும் ராயச்சூர், ஆற்றிடை நிலத்தின் மீது படையெடுத்து ராயச்சூரையும் முடுகலையும் பிடித்துக்கொண்டான்.அந்தத் திடீர்த் தாக்குதலை எதிர்ப்பதற்கு அச்சுதராயன் எவ்வித முயற்சியும் செய்வதற்கு முன்னரே அதுமுடிந்துவிட்டது. அச்சுதராயனுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுள் இந்த ஒன்றைத் தவிர வேறு எதையும் நூனிஸ் எழுதிவைக்கவில்லை என்று கூறலாம்.

அதேசமயத்தில் கஜபதி யரசன் மேற்கொண்ட படையெடுப்புத் தோல் வியடைந்தது. அதுபோலவே கொண்ட வீட்டை கைப்பற்றுவதற்காக கோல்கொண்டா சுல்தானான குதுப்ஷா செய்த முயற்சியும் தோல்வியடைந்தது.

இறுதியில் அச்சுதராயன் விஜயநகரத்தை அடைந்தபோது, ராமராயனோடு சமாதானஞ் செய்துகொண்டு, இருவரும் சேர்ந்து ஆட்சியை நடத்துவதென்ற ஏற்பாட்டுக்கு ஒத்துக் கொண்டான். அதனால் சினமடைந்த சாளுவ வீர நரசிம்மன் தலைநகரத்திலிருந்து நீங்கித் தெற்கே சென்று,உம்மத்தூர் அரசனோடும் திருவடிராஜ்ய (தென் திருவிதாங்கூர்) அரசனோடும் சேர்ந்துகொண்டு, அச்சுதனுக்கு எதிராகக் கலகஞ்செய்தான். அச்சுதன் ஒரு படையுடன் தென்னாட்டுக்குச் சென்றான். அதற்கு அவனுடைய மைத்துனன் சகலராஜு திருமலை தலைமை தாங்கினான். (தொடரும்)

# கலைத்திட்டத்தில் நாட்டுப்புறவியலை ஒரு பாடமாக்குவோம்

07

கலாபூஷணம்
செ.மெற்றாஸ்மயில்



இப் பாடநெறிகளைக் கற்போர் வாத்தியங்களில் சிலவற்றை பாமரர் கலைகளுக்குரியதெனக் கூறி வாசிக்க வெட்கப் படுகின்றார்கள்.

பாரம்பரிய கலைகளில் விருப்பங் கொண்ட சில மாணவர்கள் இக் கலையை பேண விரும்பினாலும் ஏனைய மாணவர்களின் ஏளனத்திற்கு ஆட்பட்டு பயிலுவதை நிறுத்திக் கொள்கின்றார்கள்.

சில விரிவுரையாளர்களும் மாணவர்களை பாரம்பரியக் கலைகளையும், நாட்டார் இசையையும் பயிலவிடாது தடுக்கின்றார்கள். பல்கலைக்கழக கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் நாட்டார் பாடல்களளை கர்நாடக சங்கீத இராகத்திற்கு உட்படுத்தி நாட்டார் பாடல்களின் மூலவேரை அறுக்கின்றார்கள்.

பல்கலைக்கழகத்தில் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம்,அழகியல் ஆகிய பாடத்துறை சார்ந்த மாணவர்களை பாமரர் கலைகள் பற்றியும் கலைஞர்கள் பற்றியும் கட்டுரை சமர்ப்பிக்குமாறு பரீட்சைத் திட்டத்தில் சேர்ந்துள்ளார்கள்.

இம் மாணவர்களுக்கு இத்துறை சம்பந்தமான எந்த அறிவுமில்லாது கட்டுரைக்கான பொருள் தேடி கலைஞர்களிடம் பேட்டிக்குச் செல்கின்றார்கள். துறைசார்ந்த கலைஞரிடமே விடயத்திற்கான விபரத்தையும் அதற்குரிய கேள்விகளையும் அமைத்துத் தரும்படி கேட்கிறார்கள். அவர்களுக்கு இவ்விடயம் பற்றிய எந்த விளக்கமும் இல்லாமையால் தவிக்கிறார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் பல்கலைக் கழகத்தில் ஒரு சில நிகழ்வுகளுக்காக மரபுக் கலைகளைக் கொண்ட நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஆற்றுகை நடத்திவிட்டு,பல்கலைக் கழகத்திலுள்ள தமிழ்,சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய துறைகளில் பாரம்பரியக் கலைகளின் நிகழ்வுகள், கற்பித்தல் இடம்பெறுகிறது என்று கூறி கல்விமான்கள் தப்பித்து விடுகிறார்கள்.

தமிழ்த்துறையில் நாட்டார் இலக்கியம் ஒரு பகுதியாக உண்டு. ஆனால் நாட்டார் கலைகள் எத்துறையில் செயல் முறையாக இடம்பெறுவதில்லை. அது கலைத்திட்டத் திலும் இல்லை.


பாடசாலைகளில் ஆறாம் ஆண்டிலிருந்து சங்கீத பாடத்தில் நாட்டார் பாடல் எனும் பகுதி பாடத்திட்டத்தில் உண்டு. ஆனால் பெரும்பான்மையான மாணவர்கள் கர்நாடக சங்கீத ராகத்திலேயே பாடல்களை பாடுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. பிள்ளைகள் மூலவேரோடு பாடினாலும் கர்நாடாக சங்கீத ஆசிரியர்கள் கர்நாடக இசைக்குள் அப் பிள்ளைகளைக் கொண்டு சென்றுவிடுவார்கள்.

வளமான நாட்டார் பாடல்களை மூலவேர் அறாமல் இந் நாட்டார் இசையிலே பயிற்றுவிக்கத்தக்க ஆசிரியர்கள் ஒரு சிலரே உள்ளனர்.

எனவே நாட்டுப் புறவியலின் முக்கியத்துவத்தையும் நாட்டுப்புறக் கலையின் செழுமையையும் இவற் றின் கட்டாயத் தேவையையும் தற்போதைய நிலைப்பாட்டையும் இங்கு பார்த்தோம். இந்நிலையில் நாட்டுப் புறப் பண்பாட்டுக்கலை கலாசார தமிழ்த்தேசிய சொத்தினை நிரந்தரமாகப் பேண பின்வ ரும் ஆலோசனைகள் முன் வைக்கப்படுகின்றன.

**ஆலோசனைகள்**

1.தரம் 5 வகுப்புக்குக் கீழ் “ அழகெழல்” என்னும் பாடத்தை உருவாக்கி, அம் மாணவர்களுக்கு பாமரர் கலைகளின் செய் முறையையும், நாட்டாரிசையையும் பயிற்சிபெறக் கூடிய அத்தி வாரம் இடப்பட்ட கலைத் திட்டம் உருவாக்கப் படவேண்டும். (தொடரும்)




வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட தமிழ் இலக்கிய விழாவின் போது 2008 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் சிறுகதை துறை விருதை "லோமியா" எனும் நாவலின் ஆசிரியர் எஸ்.ஏ. உதயனும் நாடகத் துறை விருதை "பத்தினித் தெய்வம்" எனும் நூலின் ஆசிரியர் (அகளங்கன்) நா. தர்மராஜாவும் சிறுவர் இலக்கியத் துறைக்கான விருதை "செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தையும்" எனும் நூலின் ஆசிரியர் (இயல்வாணன்) சு. ஸ்ரீகுமரனும் பெற்றுக் கொள்வதைப் படங்களில் காணலாம்.

### ஜனாதிபதித் தேர்தலில்

# சரத் பொன்சேகா போட்டியிட்டால் ஆதரவளிக்க ஜே.வி.பி. தயார்

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரேயானால் கட்சி பேதமின்றி ஆதரவளிக்க தயார் என்று ஜே.வி.பி. எம்.பி. லால் காந்த கூறியுள்ளார். உழைக்கும் வர்க்கத்தின் சம்பள உயர்வு உள்ளிட்ட ஏனைய உரிமைகளை தட்டிப் பறித்து ஜனநாயகத்திற்கு விரோதமாக செயற்படும் தற்போதைய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் மக்கள் போராட்டம் அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் விஷேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் புதன்கிழமை தேசிய நூலகத்தில் நடைபெற்ற போதே லால்காந்த இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த அரசாங்கத்தினால் உழைக்கும் மக்களையோ நாட்டையோ பாதுகாத்து தேர்தல்களை நடத்தி அதில் வெற்றி பெற்று தமது ஆட்சியை பாதுகாப்பதை தவிர ஏனைய சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் தீர்த்து வைப்பதற்கான தேவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு கிடையாது. சம்பள உயர்வு உள்ளிட்ட உழைக்கும் வர்க்கத்தின் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் பலமுறை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் கடந்த மூன்றாண்டு காலமாக உள்நாட்டில் காணப்பட்ட யுத்தத்தை காரணம் காட்டி இவற்றை அரசாங்கம் தட்டிக் கழித்து வந்தது.

ஆனால், தற்போது உள்நாட்டு யுத்தம் முடிபடைந்துள்ள நிலையில் உழைக்கும் வர்க்கத்தினரதும் நாட்டு மக்களினதும் பிரச்சினைகளை கருத்தில் கொள்ளாது அரசாங்கம் தமது சுய இலாப போக்கையே பின்பற்றி வருகின்றது.

எனவே இனியும் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைப்பதில் எவ்விதமான பயனுமில்லை. மக்களுக்கும் நாட்டிற்கும் பயனில்லாத இந்த அரசாங்கம் ஆட்சியிலிருப்பதால் யாருக்கும் நன்மை இல்லை. அடுத்த வாரம் முதல் பொது மக்களுக்கு பயனில்லாத தற்போதைய அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்பும் போராட்டத்தை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் முன்னெடுக்கும்.

இதன் முதற்கட்டமாக அரச மற்றும் தனியார் ஊழியர்களுடன் இணைந்து பாரியளவிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். உழைக்கும் மக்களின் இப்போராட்டத்திற்கு அரசாங்கத்தின் பதில் மௌனமாகவே அமையும்.

ஆனால் அடுத்தகட்ட போராட்டம் சகல துறைகளும் உள்ளடங்களான நாடளாவிய ரீதியிலான வேலை நிறுத்த போராட்டமாகும். இதனை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும்.

எந்தவொரு அரசியல் கட்சியுடனும் பங்காளியாக இருந்து செயற்பட ஜே.வி.பி.க்கு தகுதியும் அனுபவமும் உள்ளது. இந்த அனுபவத்தைக் கொண்டு எதிர்வரும் தேர்தல்களில் கூட்டணியமைத்து ஜனநாயகத்தை பாதுகாத்து பொது மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய சிறந்த தலைவரை ஆட்சியில் அமர்த்துவோம் என தெரிவித்துள்ளார்.

(ஓ-6)

# இவ்வாண்டில் வரிவருமானம் 132 பில்லியனால் வீழ்ச்சி

### தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டில் வரி வருமானம் 132 பில்லியனினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச வங்கிகள் உள்ளிட்ட நிறுவனங்களில் பெற்றுக் கொண்ட கடன் மற்றும் வட்டித் தொகைகளை செலுத்துவதற்கு ஆயிரத்து அறுபது கோடி மேலதிக நிதி தேவைப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலதிக நிதி கோரி முன்வைக்கப்பட்ட குறைநிரப்புப் பிரேரணையின் போது இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்பட்டதனை விடவும் வரி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் நடைபெற்ற மனிதாபிமான மீட்புப் பணிகளினால் பாதுகாப்புச் செலவீனங்கள் உயர்வடைந்துள்ளதாகவும் இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஓ-6)

# ஜி.எஸ்.பி+வரிச்சலுகை கிடைக்காமல் போனதற்கு அரசின் செயற்பாடுகளே காரணம்

### ஐ.தே.க. பேச்சாளர் கயந்த கருணாதிலக்க

(கொழும்பு)

ஜி.எஸ்.பி. வரிச்சலுகை கிடைக்காமல் போனதற்கு அரசாங்கத்தின் செயற்பாடுகளே காரணம்.

அதை பெற்றுக் கொள்வது தொடர்பில் அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டுவதாக தெரியவில்லை என ஐ.தே.க பேச்சாளர் கயந்த கருணாதிலக்க நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜீ. எஸ்.பி வரிச்சலுகை பெறுவதும் கூட அரசியல் மேடைப் பேச்சு போன்றே கருதி செயற்படுவதாகத் தெரிகிறது. இதனால் 150 டொலர் மில்லியன் நிதி நாட்டுக்குக் கிடைக்காமல் போகவுள்ளது.

இது பிரச்சினையற்ற ஒரு விடயம் என அரசாங்கம் கூறுகிறது. அரசுக்கு இது பிரச்சினை இல்லை என்றாலும் மக்களுக்கு இது ஒரு பாரிய பிரச்சினையே.

இத்தருணத்தில் கிராமங்களில் ஐ.தே.க உருவாக்கிய கைத்தொழில்கள் இன்று சீர்குலையும் நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டில் இலட்சக் கணக்கானோர் வேலை வாய்ப்பின்றி காணப்படுகின்றனர். கிராமங்களுக்குக் கிடைத்து வந்த வருமானங்கள் அனைத்தும் இல்லாமல் போயுள்ளன. இது தொடர்பில் அரசாங்கம் உத்தரவாதத்துடன் செயற்பட வேண்டும்.

மக்களின் உரிமைகளைக் கருத்தில் கொள்ளாததும், 17 ஆவது சீர்திருத்தத்தை அமுல்படுத்தாதிருப்பதும் வேண்டுமென்றே ஒரு தலைப்பட்சமான முடிபுகளை எடுப்பதுமே ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையைப் பெறுவதற்குப் பெரும் சவால்களாக அமைந்துள்ளன என தெரிவித்துள்ளார்.

(ஓ-6)

### 2011இல் மேற்கொள்ளப்படவுள்ள

# குடிசன மதிப்பீட்டுப் பணிகளில் 85 ஆயிரம் கணக்கெடுப்பாளர்களை ஈடுபடுத்த திட்டம்

(கொழும்பு)

கடந்த 3 தசாப்தங்களின் பின்னர் 2011 ஆம் ஆண்டில் நாடு பூராகவும் மேற்கொள்ளப்படவுள்ள குடிசனக் கணக்கெடுப்புப் பணிக்காக 85 ஆயிரம் கணக்கெடுப்பாளர்கள் கணக்கெடுப்புப் பணியில் அமர்த்தப்படுவர் என குடிசனக் கணக்கெடுப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் டி.பி.பி. வித்தியாரத்தன தெரிவித்துள்ளார்.

வரலாற்று முக்கியத்துவமிக்க இக் குடிசனக் கணக்கெடுப்பு தொடர்பாக பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளதாவது 25 நிர்வாக மாவட்டங்களிலும் இக்குடிசன கணக்கெடுப்புப் பணியினை மேற்கொள்ள 150 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 1981 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள இக்குடிசனக் கணக்கெடுப்புப் பணியின் ஆரம்ப கட்ட ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 தசாப்தகாலமாக இந்நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளினால் இந்தப் பணியினை மேற்கொள்ள முடியாமலிருந்தமை துரதிஷ்டவசமாகும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த இளைஞர்களே இப்பணிக்காக நியமனம் செய்யப்படவுள்ளனர். கணக்கெடுப்புப் பணியானது சமூக பொருளாதார மற்றும் மக்கள் தொகை என்பன தொடர்பாக 2011 இல் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு தோறும் கணக்கெடுப்பவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இப்பணிகள் நடைபெறவுள்ளன.

மாவட்ட செயலாளர்கள் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவையாளர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படவுள்ள இக்குடிசனக் கணக்கெடுப்புப் பணியின் முடிவுகள் அல்லது தரவுகள் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதமளவில் வெளியிடப்படும்.

இலங்கையில் முதலாவது தேசிய மட்ட குடிசனக் கணக்கெடுப்பு 1871ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. 2011ஆம் ஆண்டில் மேற்கொள்ளபடவுள்ள இக்குடிசன கணக்கெடுப்பானது இலங்கையில் மேற்கொள்ளப்படும் 14ஆவது தேசிய கணக்கெடுப்பாகுமென்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-6)

# இந்தியத் தூதுக்குழுவின் விஜயம்

# வெறும் சமபோஷாவுடனும் ரீயுடனும் முடியுமா?

இலங்கைத் தமிழ் மக்களின் அகதி முகாம் வாழ்க்கையை பற்றி, மனிதநேயம் கொண்ட உலகம் கண்ணீர் உகுத்துக் கொண்டிருக்கிறது.

அண்மைக் காலத்தில் உலகிலுள்ள எந்த முகாம்களிலும் இவ்வாறான மனிதத்துயரங்கள் நிறைந்திருக்கவில்லை என்பதை அவை உறுதிபட சொல்லுகின்றன.

இந்தப் பின்னணியின் மத்தியில் ஆளும் கூட்டணியில் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள காங்கிரஸ், தி.மு.க. கட்சியின் நாடாளுமன்றக் குழு/ பாதிப்பு மிகுந்த முகாம்களை பார்வையிடுவதற்காக இலங்கைக்கு சென்று திரும்பியுள்ளது.

தமிழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கு சென்றதற்கான நோக்கம் என்ன? என்பது மிகவும் முக்கியமான கேள்வியாகும்.

இந்த கேள்விக்கான பதிலை இந்த தூதுக் குழுவில் சென்ற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கே.எஸ். அழகிரி தினமலர் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் படி இந்த தூதுக்குழு உண்மை நிலைவரம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக அங்கு சென்றுள்ளது. உண்மை நிலைவரம் என்ன என்பதை மறவாமல் அந்த பேட்டியில் விளக்கியுமிருக்கிறார்.

விரும்பிய முகாம்களுக்கு நாங்கள் சென்றோம். சாப்பாட்டிற்கும், மருத்துவத்திற்கும் குறையில்லை. எட்டு முகாம்களிலும் 124 மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். 58 ஆயிரம் மாணவ, மாணவியர் முகாம்களிருந்து கொண்டே கல்வி பயிலுகிறார்கள். 2 ஆயிரம் ஆசிரியர்கள் இவர்களுக்கான கல்வியை அளிக்கிறார்கள் என்று அழகிரி பேட்டியில் கூறுகிறார். அழகிரியன் பேட்டி நமக்கு அதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது.


பாரதியின் பாடல் வரிகளான நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம் சொப்பனம் தானா? காட்சிப் பிழை தானா? என்று பாரதியின் உள்ளத்தில் எழுந்த கேள்வி அலைகள் தான் நம்மிடமும் எழுகின்றது.

வதை முகாம் முள்வேலி, பற்றி இவர் தரும் விளக்கங்கள் மேலும் நம்மை அதிர்ச்சியுற செய்கிறது.

2500 ஏக்கர் நிலப்பரப்பில், வன்னி பிரதேசத்தில் அமைந்த காட்டில் தான் நாங்கள் அகதிகளை சந்தித்தோம் என்கிறார். அவர்கள் சுதந்திரத்தோடு தான் வாழுகிறார்கள். அவர்களை யாரும் உதாசீனப்படுத்தவில்லை. துன்புறுத்தவில்லை என்று அழுத்தமாக பேட்டியளிக்கிறார்.

நாடாளுமன்ற தமிழக உறுப்பினர்களின் உண்மையறியும் பயணம் ஐந்து நாட்கள் மட்டும் தான். உண்மையறியவற்கென்று தங்கள் சொந்த செலவு அல்லது கட்சியின் செலவில் சென்றாக இவர்கள் குறிப்பிட்டு சொல்லுகிறார்கள் இதன் பொருள், இவர்கள் இந்திய அரசு அல்லது தமிழக அரசு அல்லது இலங்கை அரசின் செலவில் செல்லவில்லை என்பது தான்.

நமக்குள் எழும் கேள்வி எல்லாம் எந்த ஒரு உண்மையறியும் குழுவிற்கு சில அடிப்படையான ஆவணங்கள் தேவைப்படும். அதை இவர்கள் எங்கிருந்து பெற்றார்கள்? அழகிரியன் பேட்டியை கூர்ந்து கவனித்தால் விபரங்கள் அனைத்தும் இலங்கை அரசாங்கத்தால் தரப்பட்டவை என்பதை எளிதில் விளங்கிக் கொள்ள முடியும். மாணவன் ஒருவன், மனப்பாடம் செய்ததை திறம்பட ஒப்புவிப்பதை போல அழகிரி பேட்டியில் தடங்கல் இல்லாமல் சொல்லியிருக்கிறார்.



ஈழப் போர் ஆய்வு என்பது சிக்கலும் குழப்பமும் நிறைந்த ஒன்று. கிளாஸ்டர் என்னும் கொத்தணிக் குண்டுகளாலும், பாஸ்பரஸ் குண்டுகளாலும் மண்ணையும் மக்களையும் சிதைத்த ஒன்று எத்தனை பேர் எரிந்து சாம்பலானார்கள்.

எத்தனைபேர் மண்ணில் புதைந்து போனார்கள். கை, கால்களை இழந்தவர்கள் எத்தனை ஆயிரம் என்று இன்னமும் கணக்கிட்டு சொல்லமுடியாத துயரம் நிறைந்த ஒன்று.

இதில் தப்பிப் பிழைத்தவர்கள் அடைத்து வைக்கப்பட்ட வதை முகாம் பற்றிய உண்மை அறிதலை தான் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பது இங்கு நாம் கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒன்று.

வாழ்நிலையை ஆராயும்போது இவர்கள் அகதிகளா? அல்லது கைதிகளா என்ற சந்தேகம் உலக நாடுகள் பலவற்றிற்கு ஏற்பட்டுவிட்டது.

ஆனால் நமது குழு ஐந்து மாதங்களுக்குப் பின்னர், அங்கு சென்றுள்ளது. அனைத்து உண்மைகளையும் எப்படி ஐந்து நாட்களில் இதனால் கண்டறிய முடியும்? இந்த நாட்களில் எத்தனை மணி நேரம் துயருற்ற மக்களோடு இருந்து, எவ்வாறான உண்மைகளைக் கண்டறிந்தார்கள் என்பதை அவர்களின் மனச்சாட்சிக்கே நான் விட்டு விடுகிறேன்.

நாடாளுமன்றக் குழு முயன்று உண்மையறிந்ததில், அவர்களால் முகாம் அப்படி ஒன்றும் மோசமில்லை என்ற முடிபுக்கு தான் வர முடிந்துள்ளது. இவர்கள் மதிப்பீடு இவ்வாறு இருக்க ஐக்கிய நாடுகள் சபையும், உலகில் மற்ற நாடுகளின் மனித உரிமை அமைப்புகளும் முகாம் நிலை வரங்களைப் பற்றி என்ன சொல்கிறார்கள்.

அகதி முகாம் பல்வேறு மர்ம முடிச்சுக்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. இன அழிப்புக்கான ஆழமான தந்திரங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. முகாம்கள் மொத்தம் ஏழு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எல்லாம் மண்டலங்களிலும் மொத்தம் 41 முகாம்கள் இருக்கின்றன.

இதில் 8 முகாம்களை மட்டும் தான் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்த்ததாக தெரிகிறது. அதுவும் அவசரகதியில் பார்வையிட்டோம் என்பதை தூதுக்குழுவில் சென்ற நாடாளுமன்ற தமிழகக்குழுவின் உறுப்பினர்களில் சிலர் பேட்டியில் கூறியிருக்கிறார்கள்.

அழகிரி சொல்வதற்கும் திருமாவளவன் அளித்த பேட்டிக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. இங்கு வாழ்வதை விட எங்களுக்கு நஞ்சு கொடுத்து கொன்று விடுங்கள் என்று மக்கள் கதறி அழுது கூறியதாக திருமாவளவன் குறிப்பிடுகிறார். இது மட்டுமல்லாது ராஜபக்ஷ சகோதரர்களை தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்து ஒக்டோபர் 22 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் அறிவித்துள்ளார், திருமாவளவன்.

போர்க்காலத்தில் சொந்த குடிமக்களுக்கு எதிராகத் தடை செய்யப்பட்ட குண்டுகளை போட்டதையும் மக்களின் பேரழிவுக்கு இலங்கை அரசு காரணமாக இருந்ததையும் உலக சமூகம் மிகவும் கண்டித்து வருகிறது.

ஐக்கிய நாடுகளின் சபையின் உயர் அதிகாரிகளில் ஒருவர் ஜான் ஹோம். அகதிகள் இருப்பிடங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு சில விதிகள் உலக வழிகாட்டுதலாக வகுக்கப்பட்டுள்ளது. அவை எதுவும் இலங்கை முகாம்களில் பின்பற்றப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மற்றொரு அதிகாரி நவநீதம்பிள்ளை. போர்க்குற்றங்கள் மலிந்த நாடு இலங்கை தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை விசாரிக்காமல் இருந்தால் இது அநீதி மிகுந்த செயலாகும் என்று குறிப்பிட்டுள்ளார். நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு அனைத்து உபயோகங்களும் 5 லீற்றர் தண்ணீர் மட்டும் தான் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான துயரங்களை மறைத்து முகாம் நன்முறையில் இருப்பதாக எவ்வாறு இவர்களால் கூறமுடிகிறது?

இப்பொழுது இலங்கை இராணுவத்தின் மனித உரிமை மீறல், போர் குற்றங்கள் ஆகியவற்றிற்காகத்தான் வணிகத்தடையை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

முன்னர் ஐரோப்பிய ஒன்றியத்தால் போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் விசாரிக்க மூவர் கொண்டக் குழுவை உருவாக்கியிருந்தார்கள். இந்த அறிக்கை, கொடுமை மிகுந்த அத்துமீறல்களை உறுதி செய்துள்ளது.

இதில் வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளும் பாசிச ஆட்சியில் நடைபாதை போன்றே உள்ளது என்றும், ஆட்கள் கடத்தப்படுவதும், இளம் வயதினர் படுகொலை செய்யப்படுவதும் தொடர் கதையாகி உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இன்று இலங்கையில் எழுந்துள்ள முக்கிய பிரச்சினை எதுவென்றால், இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பு தான்.

தமிழர்களின் பிரச்சினையை முக்கியமானதாக கொண்டு, பெல்ஜியத்தின் தலைநகர் புருசெல்ஸ்ஜில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இலங்கை தேசிய வருமானத்தின் குறிப்பிடத்தக்க பகுதி தைத்த ஆடைகள், தேயிலை ஏற்றுமதியின் மூலம் தான் கிடைக்கிறது. இதிலும் தைத்த ஆடைகள் ஏற்றுமதிதான் இலங்கைக்கு முக்கியமான வருமானம்.

இப்பொழுது ஆண்டுக்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமானமுள்ளதைத்த ஆடைகள் ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு சுனாமியால் இலங்கை பாதிக்கப்பட்ட போது ஐரோப்பிய ஒன்றியங்களுக்கு ஆடை ஏற்றுமதி செய்வதில் ஜி.எஸ்.பி. என்னும் சிறப்பு வரிச் சலுகை ஐரோப்பிய ஒன்றியம் அளித்திருந்தது.

இந்த வரிச்சலுகையின் அளவு 1200 கோடி ரூபாய். சுனாமி பாதிப்பால் கிடைத்த வரிச் சலுகையை தமிழ்மக்களின் மீது தொடுத்த போர்க்குற்றத்திற்காக இன்று இலங்கை இழக்கப் போகிறது. போர்க்குற்றங்களுக்காக அளித்த வரிச் சலுகையை ரத்து செய்ய ஐரோப்பிய ஒன்றியம் விரும்புகிறது.

**சி.மகேந்திரன்**

இலங்கை மதான பொருளாதார புறக கணிப்புக்கு ஐரோப்பா உள்ளிட்ட பல நாடுகள் இன்று தயாராகிக் கொண்டிருக்கின்றன. அதற்காக அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றும் சான்றிதழுக்காக இந்திய தூதுக் குழு, ராஜபக்ஷவுக்கு தேவைப்படுகிறது.

இந்த தேவையை பூர்த்தி செய்ய தான் தூதுக்குழு இலங்கைக்கு சென்றதா? என்ற சந்தேகம் பரவலாக அனைவருக்கும் எழுந்துள்ளது.


கடைசியாக தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொன்னாடை போர்த்திய செயல், தமிழ் மக்கள் அனைவரையும் கூனிக் குறுக வைத்துவிட்டது.

இவை எல்லாவற்றிற்கு மேலாக அழகிரி தனது பேட்டியில் ராஜபக்ஷ எங்களுக்கு விருந்து எதுவும் தரவில்லை. வெறும் சமபோஷாவும் ரீ யும் தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற தூதுக்குழு வெறும் சமபோஷாவுடனும் ரியுடன் முற்று பெற்று விடப் போகிறதா? என்ற சந்தேகம் நமக்குள் எழத் தொடங்கிவிட்டது.

# குவான்டனாமோபே சட்டமூலம் அமெ.செனட் சபையில் நிறைவேற்றம்

கியூவாவில் உள்ள அமெரிக்க குவான்டனாமோபே தடுப்பு முகாமை மூடுவதற்கு ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகம் எதிர்கொண்டுள்ள தடையை நீக்கும் வகையில் அத் தடுப்பு முகாமில் உள்ள சிறைக் கைதிகள் அமெரிக்காவுக்கு மாற்றப்படுவதற்கு அனுமதிக்கும் சட்ட மூலத்திற்கு ஆதரவு அளித்து அமெரிக்க செனட் சபை வாக்களித்துள்ளது.



குவான்டனாமோபேயில் தடுத்து வைக்கப்பட்டவர்களை அமெரிக்காவுக்கு விசாரணைகளுக்காக மாற்றும் திட்டத்திற்கு அனுமதி அளித்து அமெரிக்க கீழ்ச் சபை கடந்தவாரம் வாக்களித்திருந்தது.

இந்தச் சட்ட மூலமானது 79-19என்ற வாக்குகள் வித்தியாசத்தில் செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்ட மூலம் சட்டமாக்கப்படுவதற்கு ஜனாதிபதி ஒபாமாவின் அங்கீகாரத்தைப் பெற அவருக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளது.

கியூபாவில் உள்ள குவான்டனாமோபே தடுப்பு முகாமை மூட 2010ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி வரை ஒபாமா காலக்கேடு விதித்துள்ளார்.

அந்த தடுப்பு முகாமில் 220க்கும் மேற்பட்ட சிறைக் கைதிகள் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி முகாமில் உள்ள சிலர் அமெரிக்காவில் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ள நிலையில் ஏனையவர்கள் வெளிநாடுகளுக்கோ இராணுவ விசாரணைகளுக்கோ அனுப்பப்படவுள்ளன. (ஓ-6)

# இரண்டாவது முறையாக தேசிய விருதை பெற்றார் நடிகர் பிரகாஷ்ராஜ்

(புதுடெல்லி)

தேசிய அளவில் திரைப்பட துறையில் சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் திரைப்படங்களுக்கான விருதுகளை மத்திய அரசு ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. அதன்படி,55 ஆவது தேசிய திரைப்பட விருதுகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

தேசிய அளவில் சிறந்த திரைப்படமாக



'காஞ்சிவரம்' தமிழ் திரைப் படம் தேர்வு செய்யப்பட்டது.

அந்தப் படத்தில் நடித்த பிரகாஷ்ராஜ், அகில இந்திய அளவில் சிறந்த நடிகராக தேர்வானார்.

இந்த சூழ் நிலையில், தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நேற்று முந்தினம் நடந்தது. டெல்லி விஞ்ஞான் பவன் கட்டடத்தில் நடந்த வண்ணமிகு விழாவில் ஜனாதிபதி பிரதீபா பட்டீல் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.

தேசிய அளவில் சிறந்த திரைப்படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'காஞ்சிவரம்' படத்துக்கான விருதை அன் தயாரிப்பாளர் சைலேந்திரசிங் மற்றும் இயக்குநர் பிரியதர்சன் ஆகியோர் பெற்றனர்.

அதுபோல், அந்தப் படத்தில் நடித்த நடிகர் பிரகாஷ்ராஜுக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருதை ஜனாதிபதி பிரதீபா பட்டேல் வழங்கினார். இரண்டாவது முறையாக தேசிய விருதை பிரகாஷ்ராஜ் பெற்றார். ஏற்கனவே இருவர் படத்துக்காக சிறந்த துணை நடிகர் விருதை அவர் பெற்றுள்ளார்.

சிறந்த நடிகைக்கான தேசியவிருது, கன்னட நடிகை உமா ஸ்ரீக்கு வழங்கப்பட்டது. தேசிய அளவில் சிறந்த பொழுதுபோக்கு படமாக ஷாருக்கான் நடித்த 'சக்தே இந்தியா' இந்திதிரைப் படம் தேர்வு பெற்றிருந்தது.

அந்த விருதை படத்தின் தயாரிப்பாளர் யாஷ் சோப்ரா மற்றும் இயக்குநர் சிமித் அமின் ஆகியோர் பெற்றனர். சிறந்த இயக்கு நருக்கான விருதை பிரபல மலையாள இயக்குநர் அடூர் கோபாலகிருஷ் ணனுக்கு ஜனாதிபதி வழங்கினார். தமிழில் சிறந்தபடமான ' பெரியார்'படத்துக்கும் விருது வழங்கப்பட்டது.

பிரபல இந்துஸ்தானி மற்றும் இந்தி பாடகர் மன்னாதேவ், 'தாதா சாகிப்பால்கே' விருதை பெற்றார். அவருக்கு ரூ. 10 இலட்சம் ரொக்க பரிசு, தங்கத்தாமரை மற்றும் சால்வை ஆகியவற்றை ஜனாதிபதி வழங்கினார்.

சிறந்த பின்னணிப் பாடகருக்கான விருதை சங்கர்மகாதேவனும், பாடகிக்கான விருதை ஸ்ரேயா கோஷலும் பெற்றனர். (ஓ-6)

# இலங்கை கடற்படைக்கு எதிராக கல்லூரி மாணவர்கள் போராட்டம்

இந்திய மாணவர் சங்கம் சார்பில் மதுரை அழகர்கோவில் சாலையில் உள்ள மதுரை காமராஜர் பல்கலைக்கழக கல்லூரி மாணவர்கள் கல்லூரி முன்பு நேற்று முன்தினம் காலை திடீர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து நடுக்கடலில் சிங்கள கடற்படையினர் தாக்குதல் நடத்தி வருவதை கண்டித்தும் இந்திய தேசிய கொடியினை அவமதித்த சிங்கள கடற்படையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வலியுறுத்தியும் மாணவர் சங்கத்தினர் பலர் பேசினர்.

தொடர்ந்து இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி வருவதால் தமிழக மீனவர்கள் பலர் மீன்பிடித் தொழிலையே மறக்கும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். அவர்கள் அச்சமின்றி மீன் பிடிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மாணவர்கள் திடீர் ஆர்ப்பாட்டம் நடத்தியதால் அந்த பகுதியில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டது.

உடனடியாக அங்கு அசம் பாவிதச் சம்பவம் ஏதும் ஏற்படாமல் தடுக்கும் வகையில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர். இதனால் கல்லூரி முன்பு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# கனடா அகதிகளுக்கு உதவுவதற்காக டொரன்டோவில் இருந்து வழக்கறிஞர் குழு

(கனடா)

கனடா வன்குவாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்காக தமது வழக்கறிஞர்கள் முன்னிலைப்படுவார்கள் என கனேடிய தமிழ் காங்கிரஸ் தெரிவித்துள்ளதாக ஏ.எப்.பி.செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட 76 இலங்கை அகதிகள் தொடர்பிலான விசாரணைகள் இந்த வாரத்தின் முற்பகுதியில் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை குடிவரவு மற்றும் அகதிகள் சட்டத்தின் கீழ் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளால் விசாரிக்கும் பொருட்டு வன்குவார் சிறைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த நிலையில் அவர்கள் இலங்கையில் இருந்து வந்தவர்கள் என்றாலும் அதனை உறுதி செய்ய முடியாதிருப்பதாகவும் கனேடிய பொது பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் வென்லோன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அவர்கள் இலங்கையில் இருந்து வந்துள்ள தமிழகர்களாகவே இருக்க வேண்டும் என கனேடிய காங்கிரசின் பேச்சாளர் சூ நாதன் தெரிவித்துள்ளார்.

அவர்களுடன் தொடர்பினை பேண முடியாதிருப்பதிருப்பினும் அவர்கள் சார்பில் முன்னிலைப்படுத்துவதற்காக டொரன்டோவில் இருந்து வழக்கறிஞர் குழு ஒன்று வன்குவாருக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# காவல் பணியில் ஈடுபட்டுள்ள சீக்கியர்கள் தலைப்பாகை அணிய அமெரிக்கா அனுமதி

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பாதுகாப்புப்பணியில் ஈடுபடும் சிக்கீயர்கள் தலைப் பாகை அணிந்து கொள்ளவும் தாடி வைத்துக் கொள்ளவும் அனுமதிக்தப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தனியார் மற்றும் அரசு துறை சார்ந்த காவல் பணியில் ஈடுபட்டு வந்த சீக்கி யர்கள் தலைப்பாகை அணியவும், தாடி வைத்துக்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதை மீறி ரகுவீர் சிங் என்பவர் தாடியுடனும், தலைப்பாகையுடனும் பணிக்கு வந்ததால், கடந்த 2005 ஆம் ஆண்டு பணியிலிருந்து நீக்கப்பட்டார். இதை எதிர்த்து சீக்கியர்கள் அமைப்பு,2007 ஆம்ஆண்டு நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தது.

இந்நிலையில், அமெரிக்க உள்துறை அமைச்சகத்துடன்ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் அடிப்படையில் சீக்கியர்கள் தலைப்பாகையும், தாடியும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டு பணியிலிருந்து நீக்கப்பட்ட ரகுவீர் சிங்குக்கு நஷ்ட ஈடு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டின்படி, அமெரிக்க சீக்கியர்கள் தாங்கள் பணிபுரியும் இடங்களில் தாடி மற்றும் தலைப்பாகை வைத்துக் கொள்ள வழி ஏற்பட்டுள்ளது. (ஓ-6)

## விசாரணை கைதியால் நேர்ந்த விபத்து

(மதுரா)

மதுராவில் நடந்த ரயில் விபத்துக்கள் ரயிலின் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தியதுதான் காரணம் என்பது உறுதியாக தெரிய வந்துள்ளது.

ராஜஸ்தானின் கோட்டா நகரில் இருந்து முன்னா சாஜித் என்ற விசாரணை கைதியை டெல்லி நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிசார் மேவார் எக்ஸ்பிரஸ் ரயிலில் அழைத்து வந்தனர். ரயில் மதுரா அருகே வந்தபோது அவன் தப்பிச் செல்ல முயன்றதால் பொலிஸார் ரயில் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தினர்.

ரயில் நின்ற அந்த நேரத்தில் தான் பின்னால் வந்த கோவா எக்ஸ்பிரஸ் அதன் மீது மோதி 22 பேரை காவு கொண்டு விட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை 4 மாணி அளவில் விபத்துக்குள்ளான ரயில் பெட்டியின் இருக்கைக்கு அடியில் இருந்து இரண்டரை வயது பெண் குழந்தை ஒன்றை இராணுவ வீரர்கள் பத்திரமாக மீட்டனர்.

எனினும் அந்த குழந்தையின் பெற்றோரையோ உறவினர்களையோ கண்டறிய முடியவில்லை.

அந்த குழந்தை பராமரிப்ப தற்காக மதுராவில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ஓ-6)

## ஆயுள் நீடிப்பு வேண்டி எமன் வழிபாட்டுக்குச் சென்ற 8 பேர் விபத்தில் பலி

(நகரி)

ஆந்திர மாநிலம் கரீம் நகர் மாவட்டம் தர்மபுரியில் அமைந்துள்ளது லட்சுமி நரசிம்மன் கோவில். இக்கோவிலில் பிரமாண்டமான எமதர்மன் சிலை உள்ளது.

தெலுங்கு கார்த்திகை மாத திங்கட்கிழமைகளில் எமதர்மன் பூமிக்கு இறங்கி வருவதாகவும் அன்றைய நாளில் அவரை வழிபட்டால் ஆயுள் நீடிப்பு தருவார் என்றும் பக்தர்கள் நம்புகிறார்கள்.

கடந்த திங்கட்கிழமை தெலுங்கு கார்த்திகை மாதம் தொடங்கியது. இதையொட்டி இக்கோவிலுக்கு மராட்டிய மாநிலம் மஞ்சாரம் கிர்ாமத்தைச் சேர்ந்த பிகலாதராவ் (வயது 78) லட்சுமண் ராவ் (52) உட்பட 8 பேர் ஆயுள் நீடிப்பு வழிபாடு நடத்த காரில் புறப்பட்டனர். அவர்கள் ஜெகத்தியாலா அருகே வந்த போது எதிரே வந்த சிமெண்ட் லொறி மோதியது.

இதில்கார் அப்பளம் போல் நொறுங் கியது. இதில் காரில் இருந்த 8 பேரும் உடல் நசுங்கி பலியானார்கள்.

ஆயுளை நீடிப்பதற்காக எமனை வழிபட வந்தவர்கள் விபத்தில் பலியான சம்பவம் ஆந்திராவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஓ-6)

# இந்திய அகதி முகாமில் இலங்கைப் பெண் தற்கொலை

தொண்டாமுத்தூர் அருகே பூளுவம் பட்டியலில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. இங்கு இலங்கையில் இருந்து கடந்த 1990 ஆம் ஆண்டு அகதியாக வந்தவர் சீனன். இவர் முகாமில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

மகள் பெயர் கீர்த்தி (19) இவரது தாய்மாமன் இலங்கையில் உள்ளார். தாய்மாமனிடம் அடிக்கடி போனில் தொடர்பு கொண்டு திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டுள்ளார்.

ஆனால் இலங்கையில் இருந்த தாய்மாமன் கீர்த்தியை திருமணம் செய்ய மறுப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதனால் மனம் உடைந்த இளம் பெண் கீர்த்தி நேற்று முன்தினம் இரவு யாருக்கும் தெரியாமல் அரளிவிதை அரைத்து குடித்து மயங்கி விழுந்தார்.

இதை பார்த்ததும் அவரது தாயார் தொண்டாமுத்தூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தார்.

பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை பரிதாபமாக இறந்தார். (ஓ-6)

# இன்று ஒரு தகவல்

## எங்கே நிம்மதி

ஓர் அரசர் இருந்தார். அவர் தன் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் ஒழுங்காகத்தான் செய்தார். இருந்தாலும் அவருக்கு மனநிம்மதி இல்லை. எப்போது பார்த்தாலும் ஏதாவது பிரச்சினை இருந்து கொண்டேயிருந்தது.

அதனால் அரசருக்கு வாழ்க்கையில் அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டது. "என்ன செய்யலாம்?" என்று தான் நெருங்கிய நண்பர்களிடம் கலந்தாலோசித்தார்.

அவர்கள் பக்கத்திலிருக்கும் காட்டில் பெரியவர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் சென்றால் ''ஏதாவது ஒரு வழி கிடைக்கும்'' என்று ஆலோசனை கூறினார்கள்.

அரசரும் காட்டுக்குச் சென்று பெரியவரைப் பார்த்தார்.

"சுவாமி... அரசாங்கத்தை நிர்வகிப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது" என்றார்.

''அப்படியானால் அதை விட்டுவிடேன்'' என்றார் பெரியவர். "நான் விலகிவிட்டால் அரச காரியங்களை யார் கவனிப்பது?" என்று மன்னர் வினவினார்.

அதற்குப் பெரியவர் உன் பிள்ளையிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு காட்டுக்கு வந்து என்னருகில் உட்கார்ந்து கொள். நிம்மதியாக இருக்கலாம்" என்றார்.

அதற்கு ராஜா, "என் மகன் மிகவும் சிறிய பையன் என்னாலேயே சுமக்க முடியாத அரச பாரத்தை அவன் எப்படித் தாங்குவான்?" என்றார்.

''அப்படியானால் அதை என்னிடம் கொடுத்துவிடு'' என்றார் பெரியவர்.

அதற்கு "சரி" என்று ஒப்புக் கொண்டார் அரசர்.

"சத்தியம் செய்து கொடு" என்று கேட்டார் பெரியவர்.

அதற்கிணங்க அரசரும் "இனிமேல் இந்த ராஜ்ஜியம் முழுவதும் உங்களுடையது'' என்று பெரியவரிடம் சாத்தியம் செய்து கொடுத்தார்.

"சரி... ராஜ்யத்தை என்னிடம் கொடுத்து விட்டால் இனிமேல் நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார் பெரியவர்.

"அரண்மனைக் கருவூலத்திலிருந்து கொஞ்சம் பொன் எடுத்துக் கொண்டு வெளிதேசம் எங்காவது போய் விடுகிறேன். அங்கே போய் ஏதாவது வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்கிறேன்" என்றார் இவர்.

''அரண்மனைக் கருவூலம் இப்பொழுது எனக்குச் சொந்தம் அதிலிருந்து எப்படி நீ பொன்னோ பணமோ எடுக்க முடியும்?" என்றார் பெரியவர்.

அதற்கு அரசர், "நீங்கள் சொல்வதும் சரிதான். அப்படியானால் நான் வேறெங்காவது சென்று ஏதாவது செய்து பிழைத்துக் கொள்கிறேன்" என்றார்.

"சரி... இப்போது வேலை செய்வது என்று நீ முடிவு செய்து விட்டால் அதை ஏன் நீ வேறெங்காவது போய்ச் செய்ய வேண்டும்? இங்கு என்னிடமே செய்யலாம்" என்றார் பெரியவர்.

''சரி, அப்படியே செய்கிறேன். எனக்கு ஒரு வேலை கொடுங்கள்'' என்று கேட்டார் ராஜா.

பெரியவர் ராஜாவிடம், நீ ஏற்கனவே ராஜாவாக இருந்து பழக்கப்பட்டவன். ஆதலால் எனக்குப் பதிலாக நீ ராஜ்ஜியத்தைக் கவனித்துக் கொள். உன்னுடைய வேலைக்கு உனக்கு சம்பளம் தருகிறேன். கடமையைச் செய்ய வேண்டியது உன் பொறுப்பு. அதில் உள்ள நல்லது கெட்டதுக்கு நான் பொறுப்பு. நீ உன் வேலையைச் செய்து விட்டு மாதா மாதம் என்னிடம் சம்பளம் வாங்கிக் கொள்" என்றார்.

அப்படியே செய்தார் ராஜா. முன்பு என்ன செய்து கொண்டிருந்தாரோ... அதையே தான் அவர் இப்பொழுதும் செய்கிறார். ஆனால் இப்போது கவலையில்லாமல் நிம்மதியாக இருந்தார். பிரச்சினைகள் பெரிதாகத் தெரியவில்லை. நிம்மதியாக அவரால் தூங்க முடிந்தது. என்னுடைய கடமையினை நான் செய்கிறேன். இந்த அரசாங்கம் என்னுடையதல்ல'' என்ற நினைப்புத்தான் அவருடைய அந்த நிம்மதிக்கு காரணம்.

ஒருமாதம் சென்ற பின் அந்தப் பெரியவரை ராஜா சந்தித்தார். "புது வேலை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார் பெரியவர். ''மனநிறைவையும், நிம்மதியையும் அளிக்கிறது" என்றார் ராஜா.

அரசாங்கம் உன்னுடையது என்று நினைத்த போது அவதி. அது உன்னுடையதில்லை என்று தெரிந்ததும் நிம்மதி. பற்றில்லாமல் கடமையைச் செய்! பலனை எதிர் பாராதே! இதுதான் நிம்மதிக்குவழி. இதையே நீ புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இப்படிச் செய்தேன்" என்றார் பெரியவர்.

நாமும் அதைப்புரிந்து கொண்டால் நிம்மதியாக வாழலாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலைகளில் சிறந்த முகாமைத்துவத்தை ஏற்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலைகளில் சிறந்த முகாமைத்துவத்தை ஏற்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் பணிப்புரைக்கமைய கல்வியின் தரத்தை உறுதிசெய்யும் பொருட்டு எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பாடசாலைகளில் சிறந்த முகாமைத்துவத்தை ஏற்படுத்துவது குறித்தும் கல்வி அமைச்சின் முகாமைத்தவ தர உறுதிப்பாட்டு பிரிவு பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

இதனொரு அங்கமாக கல்வி அமைச்சின் தர உறுதிப்பாட்டு பிரிவு வதிவிட செயலமர்வுகளை நடத்தி வருகிறது.

இச் செயலமர்வுகளின் போது பாடசாலைகளின் உள்வாரி, வெளிவாரி மதிப்பீடுகளின் மூலம் பாடசாலைக் கல்வியின் தரம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றை எவ்வாறு சிறப்படையச் செய்ய முடியும் என்ற விளக்கவுரைகளுடன் கூடியதான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை விருத்தி செய்வதற்கும் மாணவர்களின் கற்றல் ஆற்றலை மேம்படுத்துவதற்குமான செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் இச் செயலமர்வுகளின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் தரமான கல்வியின் மூலம் தரமான சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தை அடைவதை இலக்காகக் கொண்டு இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய வாரியாக நடைபெறும் இச் செயலமர்வில் மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்விக் காரியாலயம், கோட்டக் கல்விக் காரியாலயம் என்பவற்றில் பணிபுரியும் பொறுப்பு வாய்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருடன் தேசிய பாடசாலை அதிபர்களும் கலந்து கொள்கின்றனர்.

இச் செயலமர்வு நடவடிக்கைகளுக்கான நிதி கல்வித்துறை அபிவிருத்தி மானியத்திடமிருந்து பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# அதிபர் சேவை வெற்றிடங்கள் பதவி உயர்வுகள் நவ.15 ஆம் திகதிக்கு முன் வழங்கப்படும்

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

ஏறக்குறைய 21 வருடங்களாக அதிபர் சேவையில் காணப்படும் வெற்றிடங்கள் மற்றும் பதவி உயர்வுகள் என்பனவற்றை எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சின் மேலதிக செயலாளர் கே. முஹம்மட் தம்பி தலைமையில் நடைபெற்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III க்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 21 வருட காலமாக கல்வி அமைச்சர்களாக செயலாளர்களாக இருந்தவர்களின் நிர்வாகங்களின் கீழிருந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவை என்பவற்றில் காணப்பட்ட வெற்றிடங்களுக்கான நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளை வழங்குவதில் பல பிரச்சினைகள் தோன்றியிருந்தன.

அவற்றினால் அந் நியமனங்களும் பதவி உயர்வுகளும் பல காலமாக வழங்கப்படாமலிருந்து வந்துள்ளது.

கல்வி அமைச்சராக நான் பதவி ஏற்றதன் பிற்பாடு இம்மூன்ற சேவையிலும் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட்டது என்றார்.

தற்போது நியமனங்களும் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இனிவரும் காலங்களில் எவரேனும் கல்வி அமைச்சுப் பொறுப்பை ஏற்றாலும் பிரச்சினை களின்றி நியமனங்களையும் பதவி உயர்வுகளையும் வழங்குவதற்கான வழிவகைகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வைபவத்தின் போது போட்டிப் பரீட்சை மற்றும் மூப்பு அடிப்படையில் தகைமைகள் நேர்முகப் பரீட்சையின் மூலம் பரிசீலிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 289 பேரில் 100 பேருக்கான இலங்கை கல்வி அதிகாரி சேவை தரம்III க்கான நியமனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-6)

## இராசி பலன்

23.10.2009
(ஐப்பசி 06 வெள்ளிக்கிழமை)
பஞ்சமி பிற்பகல் 1.21 மணிவரை
மூலம் பின்னிரவு 4.17 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
முதலாம் ஐப்பசி வெள்ளி
ஸ்கந்த பஞ்சமி, அமிர்தசித்தம்,
உலக நற்செய்தி அறிவிப்பு தினம்.

| | |
|---|---|
| மேடம் | ஆன்றோர் சந்திப்பு, திடீர் பயணம், கட்டுப்பாடு, அச்சமான நிலை. |
| இடபம் | போசன சுகம், அபகீர்த்தி, காரிய தாமதம், வீண்பகை. |
| மிதுனம் | களஸ்திர நன்மை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம், நல்ல செய்தி. |
| கடகம் | சத்துரு ஜெயம், தெய்வ தரிசனம், புத்துணர்ச்சி, காரிய நன்மை. |
| சிங்கம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பணக்குறைவு, பூர்வ புண்ணிய கருமம். |
| கன்னி | தெய்வசிந்தை, சுபகாரியம், போசன சுகம், வீண் பயம். |
| துலாம் | கூட்டு முயற்சி, தெய்வதரிசனம், தனவருவாய், உறவினர் வருகை. |
| விருச்சிகம் | கோபப்படுதல், தனவிரயம், சயன சுகக்குறைவு, வேலைச்சுமை. |
| தனுசு | போசன சுகம், தெய்வ தரிசனம், உற்சாகமான நிலை, தொழில் நன்மை. |
| மகரம் | வீண் அலைச்சல், தெய்வ சிந்தை, புதிய முயற்சி, தனவிரயம். |
| கும்பம் | குடும்ப மகிழ்ச்சி, தெய்வ தரிசனம், கலந்துரையாடல், விருந்துபசாரம். |
| மீனம் | அதிகாரம், தன்னம்பிக்கை, தொழில் நன்மை, தெய்வ தரிசனம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 90-100 | 100 | 95 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 70 |
| தக்காளி | 50 | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 70 | 80 | 100 |
| கரட் | 50 | 70 | 80 |
| பூசணி | 20 | 30 | 30 |
| புடோல் | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 25 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 45 | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 40 | 50 | 80 |
| பாகற்காய் | 160 | 180 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கரணைக் கிழங்கு | 100 | 100 | 40 |
| பயிற்றங்காய் | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 130 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 90 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 240 | 180 | 150 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 350 | 380 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# ஐப்பசி மாதப் பலன்கள்

## துலாம்

(சித்திரை 3 - 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம், 1,2,3 ஆம் பாதங்கள் வரை)

**கவர்ச்சியாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் துலாம் ராசி நேயர்களே!**

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் சுக்ரன் மாதத் தொடக்கத்திலேயே நீச்சம் பெற்று சஞ்சரிக்கிறார்.

அத்துடன் ஏழரைச் சனியின் ஆதிக்கமும் இணைகிறது. எனவே ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய மாதமாக இம்மாதம் அமையப் போகிறது.

மேலும் விரயங்கள் மேலோங்கும் இம்மாதத்தில் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். யார் யாருக்கு எது எது வேண்டுமோ அதை வாங்கிக் கொடுத்து அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

வளர்ச்சிப் பாதையை நோக்கி நீங்கள் அடியெடுத்து வைக்க அடுத்தவர்களோடு ஒத்துப் போவதுதான் நல்ல வழி. சனீஸ்வர வழிபாட்டிலும் கவனத்தைச் செலுத்துங்கள். ராகு - கேது பெயர்ச்சியும் இம்மாதம் நடைபெற இருப்பதால் அதன் மூலம் சில மாற்றங்களை நீங்கள் காணப்போகிறீர்கள். மூன்றில் சஞ்சரிக்கும் ராகு உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும் என்றாலும், கேது ஒன்பதில் அல்லவா சஞ்சரிக்கிறார்.

எனவே, பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொள்ள நினைப்பீர்கள். உடன் பிறப்புகளை அனுசரித்துச் சென்று ஒரு சில நல்ல சம்பவங்களை வரவழைத்துக் கொள்வீர்கள்.

வித்யாகாரகன் என்று வர்ணிக்கப்படும் புதன் அக்டோபர் 21 ஆம் திகதி உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பதால் கல்வித்தடை அகலும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

மாமன் வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும். அஞ்சல் வழி அனுகூலம் உண்டு. ஆற்றல் மிக்கவர்கள் ஒத்துழைப்போடு செயல்படுவீர்கள்.

அக்டோபர் 27 ஆம்திகதி தனுசு ராசியில் ராகுவும், மிதுன ராசியில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். கோதண்ட ராகு உங்களுக்கு கொடுக்கல் – வாங்கல்களை ஒழுங்கு செய்து கொடுக்கும்.

உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். அதே நேரத்தில் ஒன்பதில் சஞ்சரிக்கும் கேது பங்காளி பகைகளை உருவாக்கலாம். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்களை ஏற்படுத்தும். தந்தை வழியில் எதிர்பார்த்த நற்பலன்கள் பாதி வந்து சேரும். ராகு கேதுக்களுக்குரிய ப்ரீதியை முறையாக யோக பலம் பெற்ற நாளில் செய்வது நல்லது.

நவம்பர் 4 ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் ராசியிலேயே சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியம் சீராகும்.

தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை எதிர்பார்த்தபடி வந்து மகிழ்ச்சியைக் கொடுக்கும். புதனும் இணைந்திருப்பதால் பூமி வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு வந்து சேரலாம்.

நவம்பர் 7 ஆம் திகதி விருச்சிக ராசியில் புதனும் சஞ்சரிக்கப் போவதால் குடும்பத்தில் அமைதி கூடும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். புது முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

அயல்நாட்டில் இருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். விஷ்ணு மற்றும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் விவகாரங்களில் இருந்து விடுபட இயலும்.

இம்மாதம் இதயம் மகிழும் சம்பவங்கள் நடைபெற சிவன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

## விருச்சிகம்

(விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம் கேட்டை வரை)

புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விருச்சிக ராசி நேயர்களே!

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் செவ்வாயை குரு பார்ப்பதால் குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும் அமைப்பு உண்டு. தொழில் முன்னேற்றம் ஏற்படும். சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். சொந்த - பந்தங்களின் ஒத்துழைப்போடு புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். சனிப் பெயர்ச்சி உங்களுக்கு சாதகமாக அமைந்திருப்பதால் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை.

லாபச் சனியின் ஆதிக்கத்தால் உத்தியோகஸ்தர்களுக்கு பிற வருமானங்கள் பெருகும். சம்பள உயர்வு கிடைக்கும். சனி வழிபாட்டை நீங்கள் முறையாக மேற்கொண்டால் மேலும் அதிக முன்னேற்றங்களை நீங்கள் காணலாம்.

ராகு - கேது பெயர்ச்சியும் நடைபெற இருப்பதால் மேலும் நற் பலன்களை நீங்கள் காணப் போகிறீர்கள். தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கோதண்ட ராகு அள்ளிக் கொடுக்கும் ஆற்றலைப் பெற்றவர்.

எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். கிளைத் தொழில்கள் தொடங்கும் வாய்ப்பினை உருவாக்கிக் கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு அன்னிய தேசத்தில் இருந்து கூட அழைப்புகள் வந்து சேரலாம். சுய ஜாதக அடிப்படையில் பயண ஸ்தானம் வலுவாக இருந்தால் அதை ஏற்றுக் கொள் லாம்.

8 ஆம் இடத்தில் கேது சஞ்சரிக்கப் போவதால் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டக் கூடிய சூழ்நிலை உருவாகும். ராகு கேதுக்களுக்குரிய ஸ்தலங்களுக்கு அனுகூலம் தரும் நட்சத்திரத்தில் சென்று வழிபட்டு வந்தால் இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும்.

அக்டோபர் 21 ஆம் திகதி துலாம் ராசியில் புதன் சஞ்சரிப்பதால் லாபாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சுப விரயங்கள் உருவாகும். நூதன பொருட்சேர்க்கை உண்டு. வீட்டுக்குத் தேவை யான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வீட்டுப் பராமரிப்புச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

அக்டோபர் 27 ஆம் திகதி பின்நோக்கிச் செல்லும் கிரகம் என்று வர்ணிக்கப்படும் ராகுவும், கேதுவும் உங்கள் வாழ்க்கை முன்னோக்கிச் செல்லும் விதத்தில் வழிகாட்ட பெயர்ச்சியாகிறார்கள். இரண்டில் சஞ்சரிக் கும் ராகு எண்ணற்ற நற்பலன்களை உங்களுக்கு வாரி வழங்குவார். குடும்ப ஒற்றுமை கூடும்.

தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். மிதுன கேதுவின் பலத்தால் ஒரு சிலருக்கு இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் ஏற்படலாம். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். சர்ப்ப சாந்தி செய்தால் சந்தோஷம் வந்து சேரும்.

**சிவல்புரி சிங்காரம்**

நவம்பர் 4 ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன், புதன், சூரியனுடன் வந்திணைகிறார். இவை மூன்றும் ஒன்று கூடி மூன்று நாட்கள் உலா வரும் பொழுது புத – சுக்ர யோகம் செயல்பட போவதால் எதிர்பாராத தனலாபம் இல்லம் வந்து சேரும். பயணங்களால் பலன் கிடைக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

இம்மாதம் இனிய மாதமாக அமையவும், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கவும் ஆனைமுகப் பெருமானுக்கு அறுகம்புல் மாலையிட்டு வழிபட்டு வாருங்கள். வடக்கு பார்த்த விநாயகர் உங்கள் வளர்ச்சிக்கு வழி காட்டுவார்.

(தொடரும்)

# தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதன் காரணமாகவே வெளிநாடு செல்கிறார்

## தேசிய சமாதானப் பேரவைத்தலைவர் ஜெகான் பெரேரா

(கொழும்பு)

இலங்கை தமிழர்கள் அவுஸ்திரேலியா மற்றும் கனடாவுக்கு சட்டவிரோதமாக செல்லும் சம்பவங்கள் இலங்கை அதிகாரிகளுக்கு பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிபடைந்துள்ள நிலையில் ஏன் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக செல்கிறார்கள் என தெரியவில்லை என மனித கடத்தல் சம்பந்தமான விடயங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர், நந்தன முனசிங்க தெரிவித்துள்ளார். இந்த சட்டவிரோத குடியேற்றங்கள் தொடர்பாக வெளிநாடுகளில் இருந்து தகவல்கள் கிடைத்துள்ள போதும், அது விசாரணைகளுக்கு போதுமானவையல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள வெளிநாட்டமைச்சின் பேச்சாளர் ஒருவர் தமிழர்கள், முகாம்களிலோ அல்லது வெளியிலோ பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கவில்லை.

இந்தநிலையில் ஏன் அவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்கிறார்கள் என தெரியவில்லை என குறிப்பிட்டுள்ளார். எனினும் யுத்தம் முடிபடைந்த பின்னரும் தமிழர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்க கொடுக்க வேண்டியுள்ளது. எனவே தான் அவர் கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் சோதனை சாவடிகள் உட்பட்ட பல்வேறு விடயங்களால் தாம் இன்னும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதாக உணர்வதன் காரணமாகவும் அவர்கள் இரண்டாம் தர பிரஜைகளாக நடத்தப்படுவதன் காரணமாகவே வெளிநாடுகளுக்கு செல்ல முனைவதாக தேசிய சமாதான பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மைக்காலமாக வெளிநாடுகளுக்கு பணிகளுக்காக செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்தமையை கடவுச்சீட்டு விண்ணப்பங்களின் அதிகரித்த நிலையில் இருந்து தெரிந்து கொள்ள முடிந்துள்ளதாக குடிவரவு குடியகழ்வு திணைக்கள உதவி கட்டுப்பாட்டாளர் சுனில் ஹெட்டியாராட்சி தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பதவியுயர்வு பெற்ற அதிபர்களுக்கு

திறமை மற்றும் சேவை மூப்பு அடிப்படையில் இலங்கை அதிபர் சேவை தரம் II,I இற்குப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கான கடிதம் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை கொழும்ப டி.எஸ். சேனநாயக்க வித்தியாலயத்தில் கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான அழைப்புக் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அழைக்கப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்வி அமைச்சின் அதிபர் பிரிவின் உதவிச் செயலாளர் மங்களா தயாரத்ன தெரிவித்துள்ளார். (ச-14)

# மிருசுவில் முகாமிலுள்ள மக்கள் விரைவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை மீள்குடியமர்த்துதல் தொடர்பாக ஒருவார காலத்துக்குள் நடவடிக்கை எடுப்பதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

மிருசுவில் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அவர்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துதல் சாத்தியமற்றது.

எனவே அவர்களை அவர்களின் உறவினர்களிடம் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் கூறினார். (ச)

# வடபகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை மயிலம் புலம் அராலி வடக்கை சேர்ந்த 32 வயதான துரைசாமி சுரேஸ்குமார் என்பவர் கடந்த 10 அம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனை தவிர வவுனியா சாஸ்திரி கூளாங்குளம் கரவேப்பங்குளத்தை சேர்ந்த 21 வயதான தங்கராஜா நிசாந்தன் என்பவர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கைதுகள் தொடர்பாக மக்கள் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் வேலை வாய்ப்புக்காக சென்ற போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சுரேஸ்குமார் பூசா முகாமிலும், நிசாந்தன் பயங்கரவாத தடுப்பு பிரிவிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீதுதான் பெரும்பாலான இராச்சியங்கள் அழிந்தன.

~ யங்

வலம்புரி

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடிவாளம் யார் கையில்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டுமென இவ்விடத்தில் எழுதியிருந்தோம். முற்றிலும் நடக்க முடியாதது என தெரிந்து கொண்டு எழுதப்பட்ட விடயம் அது.

நடக்காதெனத் தெரிந்தும் ஆறுதலுக்காக எழுதும் பண்பாடு பத்திரிகைகளில் உண்டென்பதால் அந்த பண்பாட்டிற்குள் இதனைச் சேர்த்து விடலாம்.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூண்டோடு தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டும் என எழுதப்பட்டது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது தரப்புக் கருத்துக்களை எடுத்துக் கூறியிருந்தார்.

இதற்காக அவருக்கு நன்றி கூற வேண்டும். அதேநேரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் போக்கு இப்போது திருப்தி தருவதாக இல்லை.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுயமாகச் செயற்படுவது போன்ற தோற்றப்பாடு தெரிகின்றது.

சுருங்கக் கூறின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை கட்டமைப்பை இழந்து வருகின்றதெனலாம்.

கட்சியின் சிரேஷ்டர்கள் ஏனையவர்களின் கருத்துக்கு இடமளிக்காமல் தம்பாட்டில் செயற்படுகின்றனர் என்ற கருத்தும் இருக்கவே செய்கின்றது.

இன்னும் சிலரோ வன்னியுத்தம் பற்றிய அத்தனை விபரமும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கியத்துவம் வாய்ந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

வன்னியுத்தம் பற்றி இந்தியா அவர்களுக்கு முன்கூட்டியே கூறியுள்ளது என கருத்தாடல் செய்கின்றனர்.

இவையெல்லாம் எந்தளவு தூரம் மெய்ம்மைத்தன்மையானவை என்பது பற்றிய ஆய்வுகளும் புலன் விசாரணைகளும் தேவையற்றவை அல்லது காலத்தை விரயமாக்கும் செயல் என்பதால் அதனை அப்படியே விட்டுவிடலாம். ஆனால் ஒரு விடயம் குறித்து மிகவும் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை எங்கே நிற்கின்றது. அதன் அரசியல் நகர்த்தல் யாருக்குச் சார்பானது. இது தொடர்பில் மக்கள் பலவாறாக விமர்சிக்கின்றனர்.

இந்தவிடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தெரியாமல் கூட இருக்கலாம்.

'என்னைப்பற்றி எனக்குத் தெரியாது மற்றவர்களுக்குத் தெரியும்' என்றபிரிவிற்குள் இதனை அடக்கலாம்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை துல்லியமாக வெளிப்படுத்த வேண்டும். அதேநேரம் கூட்டமைப்பிற்குள் பிடுங்குப்பாடு எதுவுமில்லை. ஒற்றுமை உண்டென்பதையும் நிரூபிக்க வேண்டும்.

இதைச் செய்யத் தவறும் சந்தர்ப்பத்தில் வேகம் எடுத்துள்ள பொதுத் தேர்தலில் பொதுமக்கள் பாடம் புகட்ட முற்படுவர்.

# கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான கொடுப்பனவு இருமடங்காக அதிகரிப்பு

## கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

தேசிய கல்வியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கொடுப்பனவை அடுத்த ஆண்டு முதல் இருமடங்காக அதிகரித்து கொடுப்பதற்கு தீர்மானித் திருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற 199 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் வைபவத்திலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தற்போது அரசாங்க ஆசிரியர் சேவையில் 2 இலட்சத்து 18 ஆயிரம் பேர் கடமை புரிகின்றனர். இது 19 மாணவர் களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் உள்ளது.

ஆனால் அபிவிருத்தியடைந்த அமெரிக்காவில் கூட 22 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலேயே உள்ளது.

கல்வி அமைச்சு எடுத்துள்ள கொள்கைத் தீர்மானத்தின் படி ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்களில் பெரும்பாலானோர் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி பாடசாலைகளில் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

## இலங்கை நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு பரீட்சையில்

# 'விடய ஆய்வு' வினாத்தாளை மீண்டும் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவை தரம் IIIக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் விடைய ஆய்வு வினாத்தாழ்களுக்குரிய பரீட்சையை மீண்டும் நடத்த பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய கடந்த மே மாதம் 30,31ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை தரம் IIIக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கான பாடங்களின் *விடய ஆய்வு* வினாத்தாள் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலும் இதற்கான மீள் பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள சட்ட திட்டங்களுக்கு ஏற்ப யாதுமொரு பரீட்சையின் வினாப்பத்திரங்களுள் ஒன்றுக்கேனும் தோற்றினால் அவர் அப்பரீட்சைக்கு தோற்றியவராகவே கருதப்படுவார்.

எனவே கடந்த மே மாதம் 30,31ஆம் திகதிகளில் நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றாத ஒருவர் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடத்தப்படவுள்ள விடைய ஆய்வு வினாத்தாழிற்குரிய பரீட்சைக்கு தோற்றும் இடத்து அவர் மேற்படி பரீட்சைக்கு ஒரு முறை தோற்றியவராகக் கருதப்படுவார் எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஓ-6)

# கனடாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அகதிகளை சந்திப்பதற்கு ஐ.நா.அதிகாரிகளுக்கு அனுமதி

(கொழும்பு)

கனடாவின் வன்குவாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 76 இலங்கையர்களை சந்திப்பதற்கு ஜக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த 76 இலங்கை அகதிகளில் பெரும் பாலானோரின் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அவர் கள் தொடர்பான விசாரணைகள் இந்த வாரத்தில் ஆரம்பிக் கப்படும் என கனடாவின் எல்லை சேவை நிறுவன பேச்சாளர் ஜோன் தெரிவித்தார்.

இதேவேளை76 அகதிகளில் இரண்டு பேருக்கு கனடாவில் புகலிடம் கோரும் விண்ணப்பத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அவர்கள் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்படமாட்டார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

# வெள்ளி நற்சிந்தனை

# பக்தியின் மொழி தமிழ் 94

காலைப் பொழுது இறை வழிபாட்டிற்கு ஏற்ற பொழுதாகும். காலையில் கடைமைக்குச் செல்லுமுன் இறைவனை வழிபட்டுச் செல்வது மனதில் புதிய மலர்ச்சியைத் தரும். இதனை அப்பர் பட்டறிவால் நன்கு உணர்ந்தவர். திருவையாற்றுத் திருத்தலத்திலே காலைப் பொழுதில் தான் செய்யும் வழிபாட்டு நடைமுறைப்பற்றி பாடலிலே குறிப்பிட்டுள்ளார். வழிபடுவதற்கு உரிய நேரத்தைப் "பெரும் புலர் காலை" எனக் கூறுகிறார். பொழுது புலர்கின்ற விடியற் காலையிலே எழுந்து நீராடி அப்போது பெறக்கூடிய மலர்களைக் கொய்து கொண்டு திருத்தலத்திற்குச் செல்கிறார்.மலர்களைப பிடுங்குதல், பறித்தல் என்ற சொற்பயன்பாடே தற்போது வழக்கிலுள்ளது. இவ்விரு சொற்களும் ஏற்றவையல்ல. மலர்களைக் கொய்தல் என்பதே சரியான சொற்பயன்பாடாகும்.

வழிபாட்டிற்குச் செல்லும் போது எத்தகைய மலர்களைக் கொய்து கொண்டு செல்லவேண்டுமென்பதை அப்பர் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

"போது தாதொடு கொண்டு", "போது பொன்திகழ் கொன்றை", "அலரும்நீரும்கொண்டாட்டி", "பூப்பெய் கூடை புனைந்து", "எருக்கங்கண்ணி கொண்டு இண்டை புனைந்து", "நறுமலர் கொய்திலர்", "மரங்களேறி மலர் பறித்திட்டிலர்", "அரும்பார்ந்தன மல்லிகை", "மட்டார் மலர் கொன்றை", "கொய்யா மலர் கோங்கு", "செய்யார் கமலம்", "செம்மலர்க் கமலம்" என வரும் தொடர்கள் இதற்குச் சான்றாகும்.

நீர்வளம் நிறைந்த பிரதேசத்தில் மலர் கொய்து செல்லும் போது அங்கு மணிகளை உருட்டி வருகின்ற ஆற்றுவளத்தையும் காண்கிறார். திருவையாறு என்னும் தலத்தின் அழகுக்கு நீர் வளமே காரணமாகும்.அத்தகைய வளமான பகுதியில் குரங்கினங்கள் வாழ்கின்றன. கோயிற் சூழலில் மந்திகள் வாழ்வது பற்றிச் சம்பந்தரும் பாடியுள்ளார்.ஆனால் சம்பந்தர் தான் கண்ட மந்தியைப் பிறிதொரு உணர்வு நிலையில் காட்டுகிறார்.

"சிலமந்தி யலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறு" எனச் சம்பந்தர் பாடியுள்ளார்.சம்பந்தர் பார்வையில் பட்ட மந்திகள் சாதாரண மந்திகள்.ஆனால் அப்பர் கண்ட கருங்குரங்கு ஆண்குரங்கு.தனக்குரிய பெண்குரங்கோடு ஆடி மகிழ்ந்து வருகின்றது. இரண்டும் இன்பம் அனுபவித்த மகிழ்வோடு வருவதை அப்பர் நயமாக "ஆடிக் கலந்து வருவன

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

கண்டேன்" எனப்பாடியுள்ளார். கருங்குரங்கின் வாழ்வியல் நடை முறையை நன்கு அறிந்தவர் போலப் பாடியுள்ளார். துணையோடுவருகின்றகாட்சி சிவமும் சக்தியுமாகத் தோன்றுகின்றது.

பக்தி வயப்பட்ட அவருடைய தெய்வீக அனுபவம் பாடலில் பதிவான போது எல்லோரையும் பரவசமடைய வைக்கின்றது. இறைவனை எங்கும் காண வைக்கின்றது.

விரும்பு மதிக் கண்ணியானை மெல்லியலாளொடும் பாடிப்
பெரும்புலர் காலையெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்துமையாறடைகின்ற போது
கருங்கலை பேடையோடாடிக் கலந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

# யூசர் எக்கவுண்ட் உருவாக்கலாம்

இப்போதெல்லாம் ஒரே கணனியை பலர் பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது. ஒருவர் உருவாக்கும் பைல்களை அடுத்தவர்கள் அறியாமல் இருக்க வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி ஒருவர் அமைத்த செட்டிங்ஸ் பின்னணியில் கணனி பயன்படுத்த மற்றவர்கள் விரும்பமாட்டார்கள். எனவே தான் கணனி இயக்கத் தொடங்கும் போதே அவரவர் அமைத்த பின்னணியில் நுழையும் வகையில் செட் செய்திடலாம் இதனையே யூசர் எக்கவுண்ட் என அழைக்கிறோம். இதனை எப்படி அமைக்கலாம் என்று இங்கு பார்க்கலாம்.

◆யூசர் எக்கவுண்ட் உருவாக்கும் வசதி விஸ்டா மற்றும் எக்ஸ்பி சிஸ்டங்களில் கொண்டரோல் பனலில் உள்ளது எனவே இதனைப் பெற ஸ்டார்ட் அழுத்தி அதில் கொண்ட்ரோல் பனலைக் கிளிக் செய்திடவும் எக்ஸ்பி சிஸ்டத்தில் யூசர் எக்கவுண்ட்ஸ் பிரிவிற்கான ஐகன் இல்லை என்றால் கொண்ட்ரோல் பனலில் இடது பக்கம் Switch to Classic View என்பதன் மேல் கிளிக் செய்திடவும் கிளிக் செய்தவுடன் வலது பக்கம் ஐகன்கள் அணி வகுத்துக் கிடைக்கும்.

◆விண்டோஸ் எக்ஸ்பியில் ஒரு புதிய யூசர் எக்கவுண்ட்டை உருவாக்க User Accounts என்பதில் டபுள் கிளிக் செய்திடவும். பின்னர் கிடைக்கும் ஒப்ஷன்களில் Create a New Account என்பதில் கிளிக் செய்யவும். இதன் பின் கிடைக்கும் ஸ்கிரீனில் யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட் அமைக்கும் படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள். அடுத்து தனி பெட்டி ஒன்று தரப்படும். இதில் எந்த வகை எக்கவுண்ட்டாக அதனை செட் செய்திட விரும்புகிறீர்கள் என்று கேட்கப்பட்டு உங்கள் விருப்பங்களுக்காக அது காத்திருக்கும்.


◆எக்ஸ்பி. சிஸ்டத்தில் இரண்டு வகை எக்கவுண்ட்கள் உண்டு. கணனி அட்மினிஸ்ட்ரேட்டர்களுக்குக் கணனியில் எதனையும் மேற்கொள்ள சுதந்திரம் உண்டு எந்த செட்டிங்ஸையும் மாற்ற முடியும். மற்ற வகை யூசர் எக்கவுண்ட்டில் புரோகிராம்களைப் பயன்படுத்தலாம். செட்டிங்ஸை மாற்ற முடியாது. இதனை லிமிடெட் எக்கவுண்ட் என அழைக்கலாம்.

◆ஏற்கனவே யூசர் எக்கவுண்ட் ஏற்படுத்தப்பட்டு இருந்தால் அதில் மாற்றங்களை நீங்கள் மேற்கொள்ளலாம். எந்த எக்கவுண்ட்டில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமோ அதில் கிளிக் செய்து பின் மாற்றங்களை ஏற்படுத்தலாம். விஸ்டாவில் இதனை வேறு வழியாக மேற்கொள்ள வேண்டும்.Control Panel சென்று அதன் மேலாக வலது பக்கம் உள்ள User Accounts and Family Security என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதில் Add or Remove User Account என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

◆இங்கு யூசர் எக்கவுண்ட் கொண்ட்ரோல் பொப் அப் ஆகும். இதில் உங்கள் அனுமதி கேட்டு அதற்காகக் காத்திருக்கும் இங்கு கொண்டின்யூ என்பதில் கிளிக் செய்திட்டால் மனேஜ் எக்கவுண்ட் என்னும் விண்டோ திறக்கப்படும். அங்கு இடது கீழ் பாகத்தில் கிடைக்கும் Create a New Account என்பதில் கிளிக் செய்திடவும்.

இதில் புதிய எக்கவுண்ட்டுக்கான பெயரை டைப் செய்திடவும் எக்ஸ்பி. சிஸ்டம் போலவே விஸ்டாவிலும் ஸ்டாண்டர்ட் மற்றும் அட்மினிஸ்ட்ரேட்டர் என இரு வகைகளைக் கொடுத்து நம் விருப்பத்தினைக் கேட்கும். இதில் ஸ்டாண்டர்ட் என்பதனைத் தேர்ந்தெடுப்பது நல்லது.

◆Create Account என்பதில் கிளிக் செய்திடுகையில் New User Account , Manage Accounts Box இல் கிடைக்கும். விண்டோஸ் எக்ஸ்பியில் உள்ளது போலவே ஒவ்வொரு யூசருக்கும் செட்டிங்ஸை மாற்றலாம். இதற்கு Manage Account ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். விஸ்டாவில் புதிய வசதி




ஒன்று தரப்பட்டுள்ளது. குழந்தை களுக்கென ஒரு எக்கவுண்ட் திறந்த பின் அதனை பெற்றோர் கொண்ட்ரோலுக்கான ஒப்ஷன்களை Parental Controls உருவாக்கலாம். இதனை மேற்கொள்ள என்பதில் Setup Parental Options என்பதில் கிளிக் செய்திட வேண்டும்.

◆இப்போது மீண்டும் ஒரு விண்டோவில் டயலொக் பொக்ஸ் ஒன்று திறக்கப்படும். இங்கு உங்கள் அனுமதியைக் கேட்கும் அதில் Continue என்பதில் கிளிக் செய்திடலாம் . இப்போது அனைத்து யூசர் எக்கவுண்ட்ஸ்களும் கொண்ட பட்டியல் ஒன்று கிடைக்கும். எந்த யூசர் எக்கவுண்ட்டில் பேரண்டல் கொண்ட்ரோல்களை அமைக்க வேண்டுமோ அதில் கிளிக் செய்து தேர்ந்தெடுங்கள் .இனி அந்த எக்கவுண்டுக்கான User Controls Box கிடைக்கும். இங்கு கிடைக்கும் கட்டுப்பாடு வகைகளில் எந்த வகைக் கட்டுப்பாடுகளை அமைக்க வேண்டுமோ அவற்றைத் தேர்ந்தெடுத்து அமைக்கவும்.




# உங்கள் இன்டர்நெட் உங்களுக்கு மட்டும்

இன்டர்நெட்டில் பிரவுஸ் செய்து பல விடயங்களைப் பெறுகிறோம். வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் தங்கள் வர்த்தக வளர்ச்சிக்காக சர்வதேச அளவில் தகவல்களைத் தேடுவார்கள். வேலை தேடுபவர்கள், போட்டித் தேர்வு எழுதுபவர்கள், தங்கள் முன்னேற்றத்திற்கென இணையத்தில் தங்கள் தேடலை மேற்கொள்வார்கள். போட்டிகள் நிறைந்த இந்த உலகில் இத்தகைய தேடல்கள் எல்லாம் மற்றவர்களுக்குத் தெரியக் கூடாதே.

ஆனால் உங்கள் இன்டர்நெட் பிரவுசிங் செயல்பாடுகள் அனைத்தும் உங்கள் கணனியில் இன்டர்நெட் ஹிஸ்டரியாகப் பதியப்படுகிறதே. இதனைப் பயன்படுத்தி யார் வேண்டுமானாலும் நீங்கள் என்ன என்ன தளங்களைப் பார்த்தீர்கள் என்று அறிந்து அவர்களும் அந்தத் தளங்களில் இருந்து தகவல்களைப் பெற்று உங்களுக்குப் போட்டியாக செயல்படலாமே.ஆம் இதற்கு என்ன வழி? .

இத்தகைய நிலை சில மாதங்களுக்கு முன் இருந்தது. ஆனால் இப்போது வரும் பிரவுசர் பதிப்புகள் உங்களின் இன்டர்நெட் உலா அடுத்தவர் பார்த்து அறியாத வகையில் இருக்க செட்டிங்ஸ் ஏற்படுத்தும் வசதிகளை அளிக்கின்றன.



அவற்றை இங்கு பார்க்கலாம். பிரவுசர்களில் உள்ள இந்த வசதிகளுடன் சில தேர்ட் பார்ட்டி புரோகிராம் எனப்படும் சில புரொகிராம்களும் இந்த வசதியை அளிக்கின்றன. இங்கு இப்படி உங்கள் பிரவுசிங் சம்பந்தமான இன்டர்நெட் எக்ஸ் புளோரர் பதிப்பு 8 மற்றும் பயர் பொக்ஸ் பதிப்பு 3.5 ஆகியவை சார்ந்த பாது காப்பு வழிகளைப் பார்க்கலாம்.

● முதலில் இன்டர்நெட் எக்ஸ்புளோரரைப் பார்ப்போம் டூல்ஸ் மெனு கிளிக் செய்து கிடைக்கும் மெனுவில் மேலாக உள்ள டெலீட் பிரவுசிங் ஹிஸ்டரி என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். கிடைக்கும் டயலொக் பொக்ஸில் ஐந்து ஒப்ஷன் கள் தரப்படும். இந்த ஒப்ஷன்களைத் தேர்ந் தெடுப்பதன் மூலம் நீங்கள் பார்த்த தளங்களின் பட்டியலை அழிக்கலாம். குக்கி பைல்களை நீக்கலாம். அனைத்துத் தடயங்களையும் நீக்கலாம். எவற்றை நீக்க வேண்டும் என முடிவு செய்து அவற்றைத் தேர்ந்தெடுத்து நீக்கவும். ஆனால் எதனையும் நீக்கும் முன் ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்துச் செயல்படவும்.

ஏனென்றால் பாஸ்வேர்ட்களை நினைவில் வைத்துப் பயன்படுத்தும் வகை யில் நீங்கள் அமைத்திருக்கலாம். அவற் றை நீக்கும் ஒப்ஷனைத் தேர்ந்தெடுப் பதில் யோசித்து முடிவெடுக்கவும் . அதேபோல From Data Cookies ஆகியவற்றை நீக்கினால் உங்கள் இன்டர்நெட் பயன்பாடு சற்று தாமதமடையலாம். அல்லது முழுவதுமாக மாறலாம். எனவே தேவையான ஒப்ஷன்ஸ் தேர்ந்தெடுத்துப் பின் Ok கிளிக் செய்து வெளியேறவும் .

● இன்னொரு வழியைப் பார்ப்போம். இப்போதும் Tools Menu கிளிக் செய்து Internet Options என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு கிடைக்கும் பல டேப்கள் அடங்கிய விண்டோவில் Advanced டேப் என்பதில் கிளிக் செய்திடவும் கிடைக் கும் விண்டோவில் பெறும் ஒப்ஷன்கள் மூலமாக உங்களுடைய கணனியில் பதியப்படும் குக்கிகள் எப்படி உங்கள் இன்டர்நெட் பிரவுசிங் செயல்பாட்டில் உதவலாம் என்பதனை நீங்கள் முடிவு செய்திடலாம். பொதுவாக குக்கு பைல்கள் தீங்கு விளைவிக்கும் தன்மை உடையவை என்று நாம் எண்ணி வந்தாலும் பல குக்கிகள் அவை சார்ந்த தளங்களை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதைத் தளத்திற்கு உணர்த்தி அந்தத் தளத்துடனான நம் அனுபவத்தினைச் சீராக்குகின்றன. எனவே இங்கு தரப்படும் செட்டிங்ஸ் ஸ்கே லில் Medium என்பதைத் தேர்ந்தெடுக்க லாம்.

● இன்டர்நெட் வெப்சைட்களுக்கு நாம் செல்கையில் அந்தத் தளங்களில் இருக்கும் இமேஜஸ் மற்றும் பிற தகவல்களை நாம் வைத்திருக்கும் பிரவுசர்கள் கொப்பி செய்து வைத்துக்கொள்கின்றன என்று பலருக்குத் தெரியாது. இந்த பைல்களை இன்டர்நெட் ஒப்ஷன்ஸ் விண்டோவில் உள்ள General என்ற டேப்பினைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பார்க்கலாம்.

இதன்மூலம் நாம் திரும்பத் திரும்ப குறிப்பிட்ட தளங்களுக்குச் செல்கையில் அந்தத் தளங்கள் விரைவில் நமக்குக் கிடைக்க இந்த பைல்கள் உதவுகின்றன. Browsing History பிரிவில் Settings என்பதில் கிளிக்செய்து பின் View Files என்பதைத் தட்டினால் இந்த பைல்களைக் காணலாம். (தொடரும்)

# மைக்ரோசொப்ட் பிங் என்ன செய்கிறது?

*9ஆம் திகதித் தொடர்ச்சி...*

பிங் தளத்தில் காட்டப்படும் வசதியின் மூலம், நாம் ஒரு தளத்தின் பெயரில் கிளிக் செய்யாமலேயே,அது எப்படி இருக்கும் என ஒரு பிரிவியூவினைக் காணலாம். நம் தேடுதலுக்கான போதுமான தகவல்கள் இருந்தால், அந்தத் தளத்தின் பெயர் மீது கேர்சரைக் கொண்டு சென்றால், இந்த பிரிவியூ காட்டப்படுகிறது. இதனைப் பார்த்த பின்னர் இது நாம் தேடும் தளம் என்று முடிபெடுத்து, அதன் மேல் கிளிக் செய்திடலாம்.

இதனால் தான் பிங் தேடல் சாதனத்தை டெசிசன் இஞ்சின் என்று மைக்ரோசொப்ட் அழைக்கின்றதோ! இப்படியே பல வழிகளில் தேடல்களை எளிதாக்கித் தகவல்களை நாம் தேர்ந்தெடுத்துக் காண பிங் வழி வகுக்கிறது.

கூகுளைப் பொறுத்தவரை அதன் உயிர் நாடி மற்றும் வர்த்தகத்தின் மைய மூலதனமே தேடல் இஞ்சின்தான். ஆனால் மைக்ரோசொப்ட் கணனி உலகில் பல பிரிவுகளைக் கையாள்கிறது. இதன் சேர்ச் இஞ்சின் லைவ் சர்ச் (Live Search) ஒரு முழுமையான, இதற்கென மட்டும் வடிவமைக்கப்பட்டதாக அமைய வில்லை. கூகுள்இஞ்சினுடன் அதனால் போட்டியிடமுடியவில்லை.

ஆகவே தான் மைக்ரோசொப்ட் பிங் இஞ்சினை வடிவமைத்தது. இந்தப் பிரிவில் தனிக்காட்டு ராஜாவாக இயங்கும் கூகுள் இஞ்சினிலிருந்து தனித்துக்காட்ட, தன் பிங் ஹோம் பேஜை வண்ணமயமாக மாற்றியது. இதில் தான் அமைத்துள்ள சில முக்கிய இடங்களை ஹாட் ஸ்பாட் என அழைத்தது. இந்த ஹாட் ஸ்பாட் மீது உங்கள் கேர்சரைக் கொண்டு சென்றால், அங்குள்ள படம் குறித்து பல தகவல்கள் பாப் அப் ஆகி இதனையா தேடுகிறாய் என்று கேட்கும்.இப்படிப் பல வித்தியாசமான வகைகள் மூலம் கூகுளிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டியுள்ளது பிங்.ஒரு தகவலைத் தேடுகையில் இரண்டு இஞ்சின்களும் எப்படி இயங்குகின்றன என்று பார்க்க நீங்கள் வேறும் எங்கும் செல்ல வேண்டாம்

**bing vsgoogle. com** என்றேஓர் இணைய தளம் உள்ளது. ஆனால் கூகுளையும் சற்று திகைக்க வைத்த செய்தி யாஹூ நிறுவனத்தின் சேர்ச் இஞ்சினை மேம்படுத்த மைக்ரோசொப்ட் ஏற்படுத்திய பத்து ஆண்டு கால ஒப்பந்தம் தான். யாரும் எதிர்பார்க்காத ஒன்று இது. யாஹூ தற்போது சேர்ச் இஞ்சின் மார்க்கட்டில் 20% கொண்டுள்ளது. இத்துடன் மைக்ரோசொப்ட் தேடல் இஞ்சின் செயல்பாட்டினைக் கொண்டால் கூகுள் கொண்டிருப்பதில் பாதியாவது இந்தப் பக்கம் இருக்கும்.

மைக்ரோசொப்ட் பிங் தேடல் இஞ்சின் உருவாக்க 8 கோடி டொலர் செலவழித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பங்கு சேர்ச் இஞ்சின் மார்க்கட்டில் அதிகரிக்குமா என்பது, அவரவர் கற்பனைக்கு விட வேண்டிய கேள்வியாகும். இருப்பினும் பிங் வந்த பின்பு மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பங்கு 10% ஆக இருந்தது என்பது உண்மை. ஆனால் கூகுள் இடத்தைப் பிடிக்க மைக்ரோசொப்ட் இன்னும் கடுமையாக உழைத்து மக்களைச் சந்திக்க வேண்டும். அதற்கான புதிய வழிகளை உருவாக்க வேண்டும். செய்திடுமா என்பதுவே இப்போது விடைகாண முடியாத கேள்வி. (முற்றும்)

# யாழ். மாவட்ட நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் உறவினரிடம் செல்ல விரைவில் அனுமதி

## வலம்புரிச் செய்திக்கு யாழ்.அரச அதிபர் பதில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள்,உறவினர்கள் நண்பர்களிடம் செல்ல விரைவில் அனுமதிக்கப்படுவர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

வலம்புரியில் நேற்று வெளியான மிருசுவில் நலன்புரி முகாம்களிலுள்ள மக்கள் தங்களை விடுதலை செய்ய கோரிக்கை என்ற செய்திக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்ட நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களில் உறவினர்கள், நண்பர்கள் பொறுப்பேற்க சம்மதிக்கும் குடும்பங்களின் விபரங்களை சேகரிக்குமாறு அந்தந்த பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இதற்கமைய மிருசுவில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆயிரத்து ஒரு பேர் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இம் மக்களின் விபரங்களை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் இன்று முதல் சேகரித்து அதில் உறவினர்கள்,நண்பர்கள் பொறுப்பேற்க தயாராகவுள்ள குடும்பங்களுக்கு பாதுகாப்பு அனுமதி பெற்று அவர்களைச் செல்ல அனுமதி வழங்குவார்.

அதே போன்று ஏனைய முகாம்களிலுள்ள மக்களையும் அந்தந்த பிரதேச செயலாளர்கள் விபரங்களைச் சேகரித்து உறவினர், நண்பர்கள் பொறுப்பேற்க தயாரான குடும்பங்களுக்கு பாதுகாப்பு அனுமதி பெறப்பட்டு உறவினர்களுடன் செல்ல அனுமதி வழங்குவார்கள்.

இதற்காக யாழ். மாவட்ட நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களின் பெயர், சொந்த முகவரி, பொறுப்பேற்கவுள்ள குடும்பங்களின் உறவுமுறை போன்ற விபரங்கள் மற்றும் பொறுப்பேற்கவுள்ள உறவினர்கள், நண்பர்களின் பெயர், முகவரி ஆகியவை அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது குடும்பங்களிற்கு பாதுகாப்பு அனுமதி கிடைக்கும் ஒழுங்கில் உறவினர், நண்பர்களுடன் செல்ல அனுமதிக்கப்படுவர்.

யாழ். மாவட்டத்திலுள்ள முகாம்களில் மிருசுவில், கைதடியைத் தவிர்ந்த ஏனையவற்றில் 2 ஆயிரத்து 669 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 820 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

## விவசாயக் காணிகள் நாளை கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, தனங்கிளப்பு பகுதியில் இதுவரை காலமும் பாதுகாப்பு காரணங்களுக்காக மக்கள் பாவனைக்கு விடப்படாதிருந்த விவசாய காணிகள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ள நிலையில் தனகிளப்பு ஜே/299 பகுதியில் இன்னும் விடப்படாதிருக்கும் காணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நாளை காலை 9.00 மணிக்கு மக்கள் பாவனைக்காக மக்களிடம் கையளிக்கப் படவுள்ளது. (ச)

## இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு-3

# புதிதாக நியமனம் பெற்ற 12 பேருக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி

(திருகோணமலை)

வடக்கு மாகாணத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு 3 ற்குப் புதிதாக நியமனம் பெற்ற 12 பேருக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணப் போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு 3ற்குப் 12 பேர் நியமனம் பெற்றனர். இவ்வாறு நியமனம் பெற்றவர்களுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பதவி வழங்கப்பட்டுள்ளது.

திருமதி லதாங்கி அம்பிகைபாகன் (வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு), லெனின் அறிவழகன் (கணிதம்-வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்),கெ.மணியார்வன் (திட்டமிடல்-வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு), ரி. முகுந்தன் (கணிதம்-வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்), கே.எஸ்.சிவனருள்ராஜா (விஞ்ஞானம்- வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்),கே.செல்வன் (வர்த்தக மற்றும் கலை-வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்),

திருமதி காயத்திரி யோசப் (விஞ்ஞானம்-முல்லைத்தீவு கல்வி வலயம்), திருமதி எஸ். லாவண்யா (விஞ்ஞானம்- துணுக்காய் கல்வி வலயம்), திருமதி ரி.அபிராமி (பொது-மடுக் கல்வி வலயம்).

### தீவகத்தில் தற்காலிக இணைப்பு

அத்துடன் புதிதாக நியமிக்கப்பட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்களில் மூவருக்கு எதிர் வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை தீவகக் கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய திருமதி வலன்ரைன் (கணிதம்- துணுக்காய் கல்வி வலயம்),திருமதி வி. பாலேந்திரா (விவசாய விஞ்ஞானம்- மடுக் கல்வி வலயம்), செல்வி ஜி.தேவராஜ் (பொது-மடுக் கல்வி வலயம்) ஆகிய மூவருக்குமே தீவக கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா குறிப்பிட் டார். (ச-5)

## விடுவிக்கப்படும் மக்களின் இலவச பிரயாணத்துக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் உதவி

வவுனியா நலன்புரி நிலையங்களிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் மக்கள் தமது பிரதேசங்களுக்குச் செல்வதற்கான பிரயாண ஒழுங்குகளை இலவசமாக மேற்கொள்ளவதற்கு ஐ.ஓ.எம். நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து யாழ்.வரும் மக்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தில் வைத்து பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் தமது வீடுகளிற்கு அல்லது உறவினர்களின் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இவர்கள் தமது வீடுகளுக்குச் செல்வதற்கு தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் போது வாகன சாரதிகள் பெருமளவான நிதியை அறவிடுவதாக தெரிய வந்துள்ளது.




இதனையடுத்து யாழ்.அரச அதிபர் க. கணேஷ் ஐ.ஓ.எம்.நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு விடுவிக்கப்படும் மக்களின் பிரயாணத்துக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டதற்கமைய அந்நிறுவனம் இலவச பிரயாண வசதிகளை ஏற்படுத்த இணங்கியுள்ளது.

இதற்கமைய மக்கள் பயணிப்பதற்கும் பொருள்களை கொண்டு செல்வதற்கும் என தனித்தனியாக வாகனங்கள் ஒழுங்கு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## கிரிக்கெட் இறுதிப் போட்டியும் உதைபந்தாட்டமும்

இளைஞர்களுக்கான நாளை கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நாளை நடைபெறவுள்ளது.

இதில் கார்மேல் வெய்ஸ் அணியை எதிர்த்து ஸ்ரார் ஸ்போட்ஸ் அணி மோதவுள்ளது. இதேவேளை கொழும்பு ரட்ணம் கழக அணிக்கும் யாழ். மாவட்ட தெரிவு அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப்போட்டி இன்று மாலை 4.15 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ச-3)



நாகவிகாரையில் நேற்று நடைபெற்ற மகா கட்ரின புண்ணிய பூஜை வழிபாட்டிற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட்ட குழுவினர் செல்வதையும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கட்ரினப் பூஜை பெரகரா வீதி வலம் வந்தபோது இடம்பெற்ற காட்சிகளையும் படங்களில் காணலாம்.

படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்



## வவுனியா...

பிறமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் மக்கள் வவுனியா நகருக்கு வந்து பின்னர் நீண்ட தூரம் பயணித்து ஈரப்பெரிய குளத்திற்கு செல்ல வேண்டியுள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனதிபதியிடம் சுட்டிக் காட்டி இருந்தார். அத்துடன் ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியை வவுனியா நகருக்கு மாற்றுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கேட்டிருந்தார்.

இந்நிலையில் வவுனியா நகருக்கு அண்மையாக உள்ள தேக்கவத்தை மைதானத்திற்கு அருகாமையில் யாழ்ப்பாண பஸ் சேவை ஆரம்பிக்கும் சோதனை சாவடியை மாற்றுவதற்கான பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப் பிட்டார்.

இதேவேளை அடுத்த சில தினங்களில் தேக்கவத்தை மைதானத்தில் இருந்து பஸ் சேவை ஆரம்பிக்கப்படுமென வவுனியா தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## தமிழ் அரசியல் தலைவர்களு...

வடபகுதியில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் பொது மக்களை மனித நேய அமைப்புக்கள் அணுக இலங்கை அரசை அனுமதிக்க வைக்க ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அவசர தீர்மானம் ஒன்றை நேற்று ஐரோப்பிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

நேற்றுக் கூடிய ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் தலைவர்களுடன் இந்த இனப் பிரச்சி னைக்கு ஓர் அரசியல் தீர்வைகாண உறுதிப்பாடு காணப்பட வேண்டும்.

பயங்கர வாதத்தையும் வன்முறையையும் இறுதியாக கைவிட வேண்டும்.

விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மீது விசாரணை நடத்தும் போது மனித உரிமைகளை இலங்கை அரசு மதிக்க வேண்டும் என்றும் இந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு எதிரான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நிறுத்துவது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-14)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி வழங்கவுள்ளதால் வேறு ஒரு மண்டபத்தை ஒழுங்கு செய்ய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அடுத்த ஆண்டுக்கான இலவச பாடநூல் வழங்கும் விழா நவம்பர் மாத இறுதியில் நடத்தப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வன்னியில்...

மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் தலைவருமான பசில் ராஜபக்ஷவினால் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட வைபவத்தில் முக்கிய விருந்தினராக பசில் ராஜபக்ஷ, மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேசத்தில் உள்ள பாலிநகர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் நகர அபிவிருத்தி அமைச்சர் றோகன குமார திஸாநாயக்க, நீதி மற்றும் சட்ட மறு சீராக்கல் பிரதி அமைச்சர் டி.புத்திரசிகாமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஒரு மாதகால பகுதிக்குள் ஒரு லட்சம் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என நகர அபிவிருத்தி அமைச்சர் றோகன குமார திஸாநாயக்க மீள்குடியேற்றம் குறித்து கருத்து வெளியிட்ட போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவில் துணுக்காய், மாந்தை கிழக்கு ஏ-9 வீதியில் மேற்குப் பக்கமாக ஒட்டுசுட்டான் பகுதியில் 4 கிராமங்களிலும் மீள்குடியேற்றம் செய்யத்திட்டமிட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ச-14)

## இலங்கைப் போரின் இறுதியில் நிகழ்ந்தவை...

பெற்ற சர்வதேச மனிதாபிமான சட்ட உரிமை மீறல் அல்லது மனிதசமுதாயத்திற்கு எதிரான குற்றங்களும் அது தொடர்பான தீங்குகளும் இடம் பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய விரிவான அறிக்கை ஒன்றை ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் அமெரிக்க காங்கிரஸிடம் கையளித்துள்ளது என இலங்கையில் உள்ள ஐக்கிய அமெரிக்காவின் தூதரகம் விடுத்துள்ள பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காங்கிரஸின் வேண்டுகோளைத் தொடர்ந்து தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கையின் ஒரு பிரதி இலங்கை தூதுவரகத்திற்கும் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

மோதலில் ஈடுபட்ட இரண்டு தரப்பாரும் சம்பந்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்ட விடயங்கள் அனைத்தும் விரிவான அளவில் முதல்தர மற்றும் இரண்டாம் தர தகவல் மூலங்களில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ் அறிக்கை சட்ட ரீதியான அல்லது திட்டவட்டமான முடிபுகள் எவற்றையும் குறித்துக்காட்டவில்லை.

இவ் அறிக்கையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள பெரும்பாலான சம்பவங்கள் போர் பிராந்தியத்திற்கு அண்மையாக இருந்தவர்களிடம் இருந்தும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்துள் இருந்தவர்களிடமிருந்தும் நேரடியாக பெறப்பட்டுள்ளன.

அரசுக்கு எதிரான சக்திகளிடமிருந்து வரும் தாக்குதல்களில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ளும் உரிமை அரசுக்கு இருக்கிறது என்பதை ஐக்கிய அமெரிக்கா ஏற்றுக் கொள்கிறது. அதேவேளை அரசும் அரசுசாரா சக்திகளும் பொதுமக்களை ஆயுத மோதல்களில் இருந்தும் பாதுகாப்பது உட்பட்ட சர்வதேசசட்ட விதிகளுக்கு இணங்கிசெயற்படவேண்டும் எனவும் ஐக்கிய அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

தேசிய இணக்கப்பாட்டின் பிரிக்க முடியாத ஒரு அம்சம் கடப்பாடு என்பது. இலங்கை அரசாங்கம் அக்கடப்பாட்டை நிறைவேற்று வதற்கான சாத்தியமான பொறிமுறையை அடையாளம் கண்டுள்ளதா என்பதை ஐக்கிய அமெரிக்கா அவதானித்து வருகிறது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5,14)

## ஜி.எஸ்.பியை அலட்சியப்படுத்திய அரசாங்கம்...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர தெரிவித் தார்.

ராஜகிரியவிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

தற்போது நாட்டில் முக்கிய விடயமாகக் கருதப்படுவது ஜிஎஸ்பி சலுகை தொடர்பான விடயமே. இச்சலுகை தொடர்பாக தற்போது ஐரோப்பிய ஒன்றியம் கலந்தாலோசித்து வருகின்றது. அதாவது சில காரணங்களால் சலுகை யைப் பெற்றுக் கொள்வதில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

ஜிஎஸ்பி சலுகை கிடைக்கப் பெறுமாயின் அது நாட்டு மக்களுக்கு நன்மை தருவதாக இருக்கும். இருப்பினும் இதில் சில மாற்றங்கள் தற்போது ஏற்பட்டுள்ளன.

2005ஆம் ஆண்டு ஜிஎஸ்பி சலுகை தொடர்பான உடன்படிக்கையில் 16 நாடுகளுள் இலங்கையும் உள்ளடக்கிப்பட்டது.

ஜிஎஸ்பி சலுகையானது எல்லா நாடுகளுக்கும் கிடைக்கப் பெறுவதில்லை. வறிய நாடுகளுக்கே வழங்குவதோடு அந்நாட்டின் நிலை பற்றி ஆராய்ந்து அறிக்கை ஒன்றை பெற்றதன் பின்னரே வழங்கப்படும்.

ஜிஎஸ்பி நமது நாட்டுக்கு இது கிடைக்கப் பெற்றிருந்தமை மிகப் பெரிய வரப்பிரசாதம்.

ஆனால் இன்று அது கைநழுவி போய் விடும் போல் உள்ளது. இலங்கைக்குக்கிடைத்த ஜிஎஸ்பியானது மொங்கோலியாவுக்கு வழங்கப்பட உள்ளது.

மேலும் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 37 சதவீதமான வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் செலுத்துகின்றது.

2004 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 3 அமெரிக்க பில்லியனை அது செலுத்தியுள்ளது.

இவ்வாறான பல உதவி கிடைக்கப் பெற்ற போதும் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களால் இவை அனைத்தும் கிடைப்பது சந்தேகமாகவே உள்ளது என்றார். (ச-5)

## தென்மராட்சி பிரதேசத்தை...

இடமாகக் கொண்ட 326 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து ஒரு பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இம் மக்கள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து பிரதேச செயலக அலுவலர்களினாலும் படையினராலும் குடும்பப் பதிவுகள்மேற்கொள்ளப்பட்டு உறவினரிடம் விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் பணத்தை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கையளித்தார்.

இதுவரை வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து 6 ஆயிரத்து 110 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 132 பேரும் 133 பல்கலைக்கழக மாணவர்களும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலாக மன்னார் நலன்புரி முகாம்களிலிருந்து 139 குடும்பங்களைச் சேர்ந்த 355 பேரும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இதில் மிருசுவில் நலன்புரி முகாம்களில் ஆயிரத்து 11 பேரும் கைதடி நலன்புரி முகாமில் 2 பல்கலைக்கழக மாணவிகள் உட்பட 18 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 பேர் இன்று சாவகச்சேரிக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

இம் மக்களை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் வைத்து பிரதேச செயலகத்தினரும் படையினரும் குடும்பப்பதிவுகளை மேற்கொண்டவுடன் உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்படுவர்.

தற்போது வவுனியாவில் தங்கியிருக்கும் யாழ். மாவட்ட செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் எஸ்.சுதர்சன், நலன்புரி முகாம்களில் உள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களை பிரதேச செயலக ரீதியாக ஒழுங்கு படுத்தி அனுப்பி வைக்கின்றார்.

அத்துடன் கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 9 உத்தியோகத்தர்கள் இன்று வவுனியா செல்கின்றனர்.

இவ் உத்தியோகத்தர்கள் கோப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த குடும்பங்களை ஒழுங்கு படுத்தி யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வருவர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

## ஒப்பந்தகாரருக்கு அனுமதி...

யாழ். வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 15ஆம் திகதி வலம்புரி நாளிதழில் ‘பண்ணைவீதியின் சீர்கேடு தீவகத்தை வஞ்சிக்கும் செயல்’ என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் வரையப்பட்டிருந்தது.

இது தொடர்பில் யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் விளக்கம் கேட்டபோது, யாழ். பண்ணை–ஊர்காவற்றுறை வீதியின் முதல் ஒரு கிலோமீற்றர் பகுதியின் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக கேள்வி அறிவித்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரர்களுக்கான அனுமதியை பெருந் தெருக்கள் அமைச்சு வழங்குவதில் தாமதமாகியுள்ளதாக கூறப்பட்டது.

இது தொடர்பில் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளருடன் தொலைபேசி மூலம் கலந்துரையாடியதன் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த வீதி புனரமைப்புப் பணி களை உடனடியாக ஆரம்பிக்குமாறு பெருந் தெருக்கள் அமைச்சின் செயலாளர் யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக ஒப்பந்தக் காரருக்கு அறிவுறுத்தியுள்ளார். இதற்கமைய யாழ். பண்ணை–ஊர்கா வற்றுறை வீதியின் முதல் ஒரு கிலோ மீற்றர் புனரமைப்பு பணிகள் விரைவில் ஆரம்பிக் கப்படும்.

குறித்த வீதி யாழ். பண்ணை சந்தியிலிருந்து பாலம் வரையான ஒரு கிலோமீற்றர் பகுதி 14 மீற்றர் அளவில் அகலமாக்கப்பட்டு செப்பனிடப்படுமெனவும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

## வவுனியாவிலுள்ள மேலும்...

குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 720 பேர் நேற்றுவரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 25 ஆயிரம் பேரும் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்படுவர். இவர்கள் பாதுகாப்பு அனுமதி கிடைக்கும் ஒழுங்கில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்படுவர் என அரச அதிபர் கூறினார். இதேவேளை யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பாது காப்புஅனுமதி வழங்குவது மறுக்கப்பட்டுள்ள தாகவும் இதனால் அவர்களை அழைத்து வர முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)




### தொழிற் பயிற்சிகள்

எங்கள் நிறுவனத்தில் தொழிற்கல்விகளை பயில்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்

☆ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பெயரிங்

★ றேடியோ ★ வீடியோ டெக் ★ DVD Player
★ ரெலிவிசன் ★ CD Player ★ Amplifier — காலம்:-10மாதம்

☆ Mobile Phone Repairing
Hard ware — Hard ware Repairing
Soft ware — Phone Lock — காலம்:-3மாதம்

☆ ஏயார் கொண்டிசனிங்
குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். — காலம்:-6மாதம்

☆ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங் — காலம்:-6மாதம்

☆ Diploma in computer Hard ware Engineering — காலம்:-3மாதம்

குறிப்பு: சகல பயிற்சிகளுக்கும் 6 மாதம் முதல் 10 மாதம் வரை முழு நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்களிற்கு, பயிற்சிகள் ஆரம்பம் :23/10/2009

**JAFFNA TECHNICAL INSTITUTE**
No.45, மணிக்கூட்டு வீதி(பெருமாள் கோவில் முன் வீதி),
யாழ்ப்பாணம். T.P:- 021 222 6434, 0718561654 (C-3578)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கேர்ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.